KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

OF THE R... MA
19 FEB 1931

Vol 3] 1930 ஞூ நவம்பர் மீ 20வ [No 46.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 901
2. அப்பர் (சிற்பமும் உருவ சாஸ்திரமும்)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 903
3. குறுந்தொகை (பாட்டு 324—333)
K. இராமரத்நம் ஐயர் B.A. 905
4. ஆஸ்கார் ஒயில்டின் அருமை வாக்கியங்கள்
K. இராஜகோபாலன் 910
5. நம்மாழ்வார் வைபவம் (2ம் பத்து 4ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 912
6. தமிழ்ப்பாடம் (இலக்கணம்) 914
7. தனிப்பாடல்—கலைமகள்
நவாலி க. சோமசுந்தரம் பிள்ளை 916
8. வர்த்தமானம் 919

கலாநிலயம்

சுண்டெலியின் ஆற்றல்.

ஆற்றலின்றி இவ்விந்தியநாடு அழிந்து கிடக்கின்றதென மதிமிக மாழ்குவார் சொற்களைச் சோதிக்குங்கால் மறைபொருள் ஒன்றிரண்டு வெளியாகின்றன. அன்னார் கருத்தின்படி கைப்பொருளுடைமையும் உடலுர முடைமையும் ஆற்றலென்னுஞ் சொல்லிற்குள் அடங்கிவிடும். நோயினால் நொந்துள நொய்ம்மைக்குக் காரணம் இந்தியாவின் வறுமைநிலை யென்பர். செய்யலற்றுச்சிதைந்து கிடப்பதற்கும் காரணம் மீண்டும் அவ்வறுமையே என்பாரவர். இத்தேசம் எத்தூரம் வறியதென்பதையும், மற்றத்தேயங்களின் செல்வநிலை எத்துணைத் தென்பதையும் இதற்கு முன் பல இதழ்களில் ஆய்ந்து நாம் அதனதன் அமைதியை அயிர்த்துப்பின் உண்மையை உணர முயன்றிருக்கின்றோம். மற்று, வறியரே இந்தியர் என்று வைத்துக்கொண்டாலும், கார்லைல் உதாரணமாகக்காட்டிய வைத்தியன் ஒருவன் தன்னிடம் வந்துதன் நோய்களின் வருத்தத்தைப் பலபடக் கூறிநிற்கும் நோயாளிஒருவனுக்குப்பதிலுரைத்ததுபோல், "அதனால் யாருக்கு என்ன" (வால் 1—பக்கம் 16) என்று கேட்கவேண்டி நேர்கின்றதே.

செய்திறம் மெய்வலிஆய இவ்விரண்டிற்கும் பொருளே ஆதாரமென்று பேசுவது பகட்டாயிருக்கலாமாயினும், பயனுடைத் தன்று. பஞ்சதந்திரக் கதைகளெல்லாம்,—அவைகளைக் கற்பித்தோர் கருத்து யாவதாயினும்,—மாநுடச் சிறுமையிலேயே வேரூன்றி, சிறுமாநுட அநுபவங்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு படர்ந்து, விரகினலன்றி வாழ்வதியலாது என்னுந் தத்துவத்தைக் காண்பித்துத் தரும் தன்மைவாய்ந்த முட்செடிகள் போன்றன. இரவலன் ஒருவன் பிச்சைச் சோறுவைத்திருந்த உறியை எட்டும் பொருட்டு உயரஉயரத் தாவிக் குதித்த எலியைக் கண்டு—'இவ்வுயர் குதிக்கின்றஆற்றல் எலியின் இயற்கையில் இல்லை. ஆனால் இவ்வெலியோ அளவுகடந்து குதிக்கின்றது. இச்சக்தியை இது இன்றைக்குப் பெற்ற காரணம் யாவதோ. பொருளாலன்றிப் புது ஆற்றல் பெறவியலாதென்பர். ஆதலின் இவ்வெலி நின்று குதிக்குமிடத்திற் பொருள் புதைக்கப் பட்டிருக்க வேண்டும்' என்று ஊகித்து அவ்விடத்தைத் தோண்டிப்பார்க்கப் புதையல்ஒன்று இருந்ததுஎன்று கூறும் அக்கதைகளுள் ஒன்று. இத்தகைய கதைகளைக் கேட்டு மன்னன் மைந்தர் நால்வரும் நல்லவராய்த் திருந்தினரென முடிக்காவிடின், மானுடமனத்தின் இழிவையே சோமசன்மா பஞ்சதந்திரக் கதைகளால் பரிகசிக்க நினைத்தாரென்று எண்ணி ஒருவாறு ஆறலாம். புதையற் பொருளோ எலியின் உடைமையன்று; அது அவ்வயின் இருந்த தென்பதையும் அவ்வெலி அறியாது. ஆயினும், பொருளொன்று அவ்விடத்தில் இருந்த காரணத்தினாலேயே உயர உயரக் குதிக்குமோர் ஆற்றலை அச்சுண்டெலி பெற்றதாம். புதையற் பொருளையோ அவ்வெலி அநுபவித்ததில்லை. அநுபவிக்கப் பெற்றிலதேனும், ஆற்றலை அளிப்பதற்கே ஆதாரமாய் அப்பொருள்நிலை எலிக்கு என் செய்தது? அதனை உயரஉயரக் குதிக்க வைத்தது. இந்தக்குதிப்பெல்லாமும் எற்றுக்கு—வறிஞனொருவனுடைய பிச்சைக் கூடையில் புகுவதற்கே.

இந்தக்கதையின் ஒவ்வொரு அம்சமும், தற்காலம் செல்வத்தா லாற்றல் உடையதெனக் கருதப்படும் நாடுகளின் நிலைமைக்கு எழுத்தெழுத்தாய்ப் பொருந்தும். இங்கிலாந்து அமரிக்கா முதலிய தேயங்கள் அளவற்ற செல்வத்தை அடைந்திருக்கின்றனவென்றும் அதனால் அத்தேயத்தவர் ஆற்றல் மிகுந்தவர்களா யிருக்கின்றனரென்றும் கூறப்படும் அம்மொழிகளைக் குறிக்கொண்டு, அதனருகில் இப் பஞ்சதந்திரச் சுண்டெலியின் செய்தியையும் சேர்த்து நோக்கவேண்டும். எலிக்கோ அப்புதையற் பொருள் சொந்தமில்லை— இங்கிலாந்தின் பொருள் யாருக்குச் சொந்தம், யாரனுபவித்தார் என்று கார்லைலில் விலாசம் கேட்பது (1. வால்—பக்கம் 442) மறக்கற் பாலதன்று. அச்செல்வத்தாற் சுண்டெலி பெற்றவாற்றல் யாது— அமைதியன்று, உயர உயரக் குதித்தல். நம் மேனாட்டுச் சகோதரர்கள் அல்லும் பகலும் குதித்தலையும் கொள்கையிலே கண்ட உண்மையை மாத்யூ ஆர்னால்ட் (Matthew Arnold) அனைய தூய்மையோர் உரைத்துரைத்துப் புலம்புஞ் சொற்கள் ஒருசால் கேட்டக்கால் செவிவிட்டகலாத் தன்மையன. வெந்த நெஞ்சினால் விளம்புகின்றாரவர்:—

"O born in days when wits were fresh aud clear,
And life ran gaily as the sparkling Thames ;
Before the strange disease of modern life,
With its sick hurry, its divided aims,
Its heads o'tax'ed, its palsied hearts, was rife—
Fly hence, our contact fear !
Still fly, plunge deeper in the bowering wood !
Averse, as Dido did with gesture stern
From her false friend's approach in Hades turn,
Wave us away, and keep thy Solitude."

"But fly our paths, our feverish contact fly !
For strong the infection of our mental strife,
Which, though it gives no bliss, yet spoils for rest :
And we should win thee from thy own fair life,
Like us distracted, and like us unblest.
Soon, soon thy cheer would die,
Thy hopes grow timorous, and unfix'd thy powers,
And thy clear aims be cross and shifting made:
And then thy glad perennial youth would fade,
Fade, and grow old at last and die like ours."

கவிவரர், தம், கற்பனையிற் பிறந்த புலவனைப் பார்த்து, "ஆதலால் ஐய, சிற்றறிவினேம், எங்கள் வரவேற்பும் முகச்சிரிப்பும் வேண்டா உனக்கு, அகன்று செல்வாய்," என்று பின்னும் சொல்வார்!

"Then fly our greetings, fly our speech and smiles;
—As some grave Tyrian trades, from the sea,
Descried at sunrise an emerging prow
Lifting the cool-hair'd creepers stealthily,
The fringes of a southward-facing brow
Among the Ægean isles :
And saw the merry Grecian coaster come,
Freighhted with amber grapers, and Chian wine;
Green bursting figs, and tunnies steep'd in brine;
And knew the intruders on his ancient home,

செல்வமென்ற வொன்று எவ்விடத்தோ தங்கிக் கிடக்கின்றதென்னும் பான்மையால் நேர்ந்த பயன் இச்சுண்டெலிக் குதிப்பே. அக்குதிப்பும் எற்றுக்கு? பிச்சாபாத்திரத்தைப் பற்றிக்கொள்ள முயன்ற அவ்வெலியேபோல் இக்குறிப்பும் ஏழைகளின் வயிற்றுச் சோற்றையும் கவர்ந்து கொள்ளும் கருத்தையுடையது. இதனைத்தான் கார்லைல், "இங்கிலாந்தின் செல்வமெல்லாம் வறிஞரைப் பின்னும் வறிஞராக்கிய தல்லாமல் வேறொன்றும் செய்ததில்லை" என்று சாற்றினர்.

கள்வாரிலாமையால் பொருள் காவலுமில்லா அக்கம்பரின் கலையுலகில் "ஆற்றல் நல்லற மல்லது வேறு இல்லை" அறத்தால் வருவதே ஆற்றல் என்பதை நினையாது, அதற்குப் புறமான முயற்சிகளால் ஆற்றலுடைய வராவதென்பது பேதைமையாவதோ டமையாது படுபழிக்கிடமான முயற்சியாகும். உயிர் நீங்கிய உடலைக்காப்பதாற் பயனுண்டோ; காக்கத்தான் முடியுமோ! உயிரினும் உயர்ந்ததாய் ஓம்பவேண்டிய ஒழுக்கத்தை நீத்துநிற்பதற்குரிய இயக்கங்கள் ஒருபுறம் முழங்கிக் கொண்டிருக்க, மறுபுறம் உடலுரமும் பொருள்வளமும் சிறப்பதற்குரிய சாதனங்களெல்லாம்ஒன்றுசேர்ந்து சாதிப்ப தொன்றுமில்லை. சாதித்ததென்று கருதப்படும் ஒன்றிரண்டைச் சோதித்தால் அது தீமையேயாய்ப் பரவுந் தன்மை புலப்படும்.

சாவது காக்கவன்றோ இன்று பற்பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆற்றலுக்காக வன்றோ செல்வம் சேர்க்காலாகின்றது. சாதல் கொடியதே; வறுமையுங் கொடியதே. எனினும் வறுமையினுங் கொடியது வேறொன்றுளது. அக்கொடுமைக்கு ஆளாயினோர் தமக்குச்சாவதும் இனிய தாகின்றது என்ற உண்மையை உணர்ந்தாலன்றி உய்யவழியில்லை. இவ்வகை உயரிய உண்மைகளைஉணர வேண்டுமாயின் வள்ளுவப் பெருந்தகையன்றி நம்மனோர் வாய் பார்த்திருக்க வேறு யாரே உளர். "சாதலின் இன்னாதது இனிது அதூஉம், ஈதல் இயையாக்கடை" என்ற மந்திரம் எல்லார் அகத்திலும் இடைவிடாமற் குறைவறத் தங்கி நிற்குமாயின், பொருளல்லாப் பொருளைப்பற்றித் தொடரமாட்டார், உயிரில்லா உடலைக்கட்டித் தழுவமாட்டார். மெய்வலியும் பொருள் வளமும் எத்துணை இருப்பினும் வாழ்க்கையின் நோக்கம் இதுவலதாயின் பிறந்த நாள் முதல் போகும் நாளீறாகக் கழிந்த நாளெல்லாம் பாழான நாட்களாகும். மற்று, ஒரு முறை இவ்வெண்ணம் ஒருவன் உள்ளத்தில் உதித்திருக்குமாயின், அன்றே அவன் இறந்தானாலும் மாளாத ஆயுளும் நந்தாத செல்வமும் பெற்றவன் அவனே யென்று அறைதல் வேண்டும்.

OF THE R... 19 FEB 1931

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

16 ஓவியமும் கவித்துவமும்.

[889-வது பக்கத்தொடர்ச்சி]

கவிபாடுதல் ஓவியம் எழுதுவதுபோ லிருக்கவேண்டு மென்பதும், ஓவியம் எழுதுவது கவிபாடியது போல் போதனைசக்தியுள்ள ஆசாரியமூர்த்தமாய் விளங்கவேண்டுமென்பதும் கல்வியிலும் கலைஞானத்திலுஞ் சிறந்த துணிபுகளாய்ப் போற்றப்படுகின்றன. பதங்கள் மோனை எதுகைகளுடன் நடப்பதெல்லாம் காதுக்கு இனிமைகொடுப்பினும் மனதை உருகச் செய்யாது. உள்ளே சென்று இயற்கைத் தோற்றத்தை உருவெளித்தோற்றமெனக் காட்டி விஷயங்களைப் பதிவுசெய்து தன்வயமாக்கும் தன்மையுடையதே கவியெனத்தக்க பட்டம் பெறலாமன்றிக் காரிகை கற்றதால் சொற்களடுக்கப்பெற்ற வாக்கியங்கள் செய்யுளாகா. அங்ஙனமே ஓவியமும், உருவம் வர்ணம் முதலியவைகளால் பாமரசனங்களைப் பகட்டிவைக்கலாமெனினும் அதன் பற்பல உறுப்புக்கள் ஊட்டவேண்டிய ஞானம் விளங்காவிடின் அது கலையற்ற ஓவியமாம்.

நமது திருமுறைகளில் சைவசமயாசாரியர்கள்பாடும் பாசுரங்கள் பெரும்பாலும் ஆங்காங்குப் பெருஞ் சித்திரங்களை நம்மனத்தகத்தே எழுப்புந் தன்மையன. வன்றொண்டர் பாசுரங்கள் எம்மருங்கும் ஓவியங்களை எழுப்புவது காண்க:—

தண்கமலப் பொய்கைபுடை சூழ்ந்தழகார் தலத்திற்
றடங்கொள்பெருங் கோயிறனிற் றக்கவகையாலே
வண்கமலத் தயன்முன்னாள் வழிபாடு செய்ய
மகிழ்ந்தருளி யிருந்தபரன் மருவியவூர் வினவில்
வெண்கவரி கரும்பீலி வேங்கையொடு கோங்கின்
விரைமலரும் விரவுபுன லரிசிலின்றென் கரைமேல்
கண்கமுகின் பூம்பாளை மதுவாசங் கலந்த
கமழ்தென்றல் புகுந்துலவுங் கலயநல்லூர் காணே.

தேவாரப் பாசுரங்களால் எழுப்பப்படும் ஓவியங்கள் பலவகையன. அவையாவன:-(1) ஆடவர்கள், மகளீர் இவர் வனப்பும், விளையாட்டும், இன்பக் காட்சிகளும் (2) மிருகங்களும் பறவைகளும் இயற்கையிலியங்கும் தன்மை (3) ஸ்தாவரங்களில், மலர்கள் மரங்கள் செடிகள் பயிர் புல் முதலியனவற்றின் அந்தம். (4) ஆகாயத்தில் மேகங்கள் ஓடுவதும், மின்னுவதும் இடிமுழக்கமும் (5) இவ்வாறு பொழியும் மழையால் மலைச்சாரலில் பாயும் அருவிகள், மழையால் வருந்தும் மலையிடை வசிக்கும் மிருகங்கள், பறவைகளின் நிலை (6) ஆறும் அதில் வெள்ளம் பாய்தலும் (7) கடலின் வனப்பும், வங்கங்கள் தங்குவதும் ஓடுவதும் (8) ஊர்களில் வீதிகள் கோலம், அரங்கு முதலியன (9) கோயில் கோபுரங்களின் தோற்றம் (10) மாடமாளிகைகளின் வனப்பும் அவற்றில் தேவமாதரன்ன அழகுவாய்ந்த மகளீர் உலாவலும்(11)பூஞ்சோலைகளும், பொழில்களும் பலவகைப் பழங்களின் வீழ்ச்சியும். இவையனையபலவிதவியற்கைக்காட்சிகளை ஓவியவரைவுபோல் தேவாரப் பாக்களிற் காணலாகும். நமது சமயகுரவர்கள் இயற்கைவர்ணனைக்குப் பதிகங்கள் பாடவில்லை. ஆங்காங்குச் சிவஸ்தலங்களில் பெருமானைப் பாடுங்கால், அத்தலத்தில் தற்செயலாய்க் கண்ட இயற்கையழகை அத்திருப்பதியை மொழியுங்காலை ஒரு போக்காய் மொழிந்தனர். ஆயினும் அவை சிறுசிறு சொற்றொடர்களாய் நிற்பினும் அரியபெரிய விஷயங்களைச் சுருங்கச்சொல்லும் குருமூர்த்தமாய் விளங்குவதால், அவற்றினிடையே நம்மை யறியாது இயற்கைக் காட்சிகள் ஓவியம்போ லெழுவதுகண்டு களிக்கலாகும். அவற்றின் உதாரணங்களை மேற்கண்ட வரிசையில் காண்போம்.

(1) ஆடவர் மகளீர் வனப்பும், விளையாட்டு முதலிய இன்பக்காட்சிகளும்.

செந்துவர் வாயார் செல்வன் சேவடி சிந்திப்பார்
மைந்தர்க ளோடு மங்கையர் கூடி மயங்குவார்
இந்திர னாதி வானவர் சித்த ரெடுத் தேத்து
மந்தர னாரூ ராதிரை நாளா லது வண்ணம்.

திருவாரூர் திருவாதிரைத் திருப்பதிகம்-7

அளித்து வந்தடி கைதொழு மவர்மேல் வினைகெடு [மென்றி வையகங்
களித்து வந்துடனே கலந்தாடக் காதலராய்க்
குளித்து மூழ்கியுந் தூவியுங் குடைந்தாடு கோதையர், [குஞ்சியுள் புகத்
தெறிக்குந் தீர்த்த மருத திருவாரூ ரம்மானே.

திருவாரூர் - பண் - சீகாமரம் 6.

மனமார்தருமடவாரொடு மகிழ்மைந்தர்கண்மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே.

சம்பந்தர்.

பணிவெண் திங்கள் வாண்முக
மாதர் பாடப் பல்சடைக்
குனிவெண் டிங்கள் சூடியோ
ராடன் மேய கொள்கையான்
தனிவெள் விடையன் புள்ளினத்
தாமஞ் சூழ்சிற் றேமத்தான்
முனிவு மூப்பு நீக்கிய
முக்கண் மூர்த்தி யல்லனே.

சம்பந்தர்.

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாட லரவம்
மங்கலொடு நீள்கொடிகண் மாடமலி
நீடுபொழின் மாகற லுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ் சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்
கடவினைக டரு முடனே.

சம்பந்தர்.

மட்டுண்பார்கள் மடந்தையர் வாட்கணாற்
கட்டுண்பார்கள் கருதுவ தென்கொலோ?
தட்டிமுட்டித் தள்ளாடித் தழுக்குழி
யெட்டுமூர்த்திய ரின்னம்ப ரீசனே.

திருவின்னம்பர் - திருக்குறுந்தொகை 2.

(2) மிருகங்களும் பறவைகளும் இயற்கையி லியங்கும் தன்மை.

கம்பர் முதலிய லௌகிகக்கவிகள் இயற்கையில்அழகுப்பொருள்களின் வண்ணங்களையே வர்ணிப்பர். மயிலின் சாயல், குயிலின் குரல், மானின் பார்வை, அன்ன நடை, பிடியின் அசைவு, முதலியவைகளின் விநோதமான கற்பனைகளை அவர்களது பாசுரங்களிற் காணலாம். தற்காலத்தில் கவிச்சக்கரவர்த்தியென்று பேர்வாய்ந்த இரவீந்திரநாத டாகூரின் கவியும் அவ்வாறே இயற்கையில் அழகாய் இருப்பதை வெகு அழகாய் எடுத்துச் சொல்லும். இது நல்ல கவியின் திறமையேயாயினும், இயற்கையில் நாம் வெறுக்கும் சில பொருள்களை நமது அஹங்காரத்தால் வெறுக்கின்றோமே யன்றி வேறன்று. கடவுள் சந்நிதானத்தில் அழகு விகாரம் என்னும் பேதம் இல்லை. ஒரு தாய் பிள்ளைகள்போல் நிற்கும் நிலைகண்டு அவற்றையும் வர்ணிப்பது கடவுள் சொரூபமறிந்த நமது சமயாசாரிகளுக்கே மிகவும் உரிய கலைத்திறனும். அந்தமற்று ஒழுங்கீனமானவைகளாய்க் காணப்படும் இயற்கைப் பொருள்களையும் ஞானவொளியால் (மத்தாப்பால் இருட்பொழுதும் அழகடைவதுபோல்) இயற்கையழகு திகழக் காட்டும் திறம் சைவசமயத்தின் மகிமையாம். சிவபெருமான் இராஜலிலக்கணங்களுடனிராமல், இரவலன் தன் இலக்கணம் பெற்று, அடியார்களுடனிராமல் பேயோடாடி, வெறுப்பனவே விருப்பமாய்க் கொண்டு விளங்குந்திருக்கருணை அடியார்சித்தத்திலூறுவதால், அவர் பாடும் பாடல்களில், நரி ஆந்தை கூகை கரடி வேங்கை கழுகு நாய் குரங்கு பன்றி புழு முதலியனவும், கிளி மயில் குயில் மான் அன்னம் முதலியவைகளும், தக்கஇடங்களில் அமைக்கப்பெற்றுப் பொலிந்துதோன்றும். இத்தகைய கவித்திறமையைப் பின்வரும் பாசுரங்களிற் காண்க.

குரங்கு *

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணுமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி தொழுவாரன புகழே.

சம்பந்தர்.

கழுகு—நரி

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய விறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடு மண்ணுமலை யாரே.

ஷை

நாய் †

சென்றிலிடைச் செடிநாய் குரைக்கச் செடிச்சிகள்
மன்றலிடைப் பலிதோப் போவது வாழ்க்கையே
குன்றலிடைக் களிறாளி கொள்ளக் குறத்திகள்
முன்றலிடைப் பிடிகன்றிடு முது குன்றரே.

சுந்தரர்

* "குரக்கினங் குதிகொள்ளுங் குரக்குக்கா"—அப்பர்

† "ஒழுகு மாடத்து ளொன்பது வாய்தலும்
கழுக ரிப்பதன் முன்னங் கழலடி
தொழுது கைகளாற் றூமலர் தூவிநின்
றழுமவர்க் கன்பன் ஆனைக்கா வண்ணலே"

திருவானைக்கா - திருக்குறுந்தொகை 7.

புழு

புழுவுக்குங் குணநான் கெனக் கும்மதே
புழுவுக் கிங்கெனக் குள்ளபொல் லாங்கில்லை
புழுவி னுங்கடை யேன்புனி தன்றமர்
குழுவுக் கெவ்விடத் தேன்சென்று கூடவே.

அப்பர் - தனித்திருக்குறுந்தொகை 4.

பன்றி—கரடி

ஏனத்திரள் கிளைக்கவெரி போல மணிசிதறத்
தீயென்றவை மலைச்சாரலில் திரியுங் கரடியும்
மானும்மரை யினமும் மயின்மற்றும் பலவெல்லாம்
தேனுண்பொழில் சோலைமிகு சீபர்ப்பத மலையே.

சுந்தரர்

கூகை

மேகத்திடி குரல்வந்தெழ வெருவில் வரையிழியும்
கூகைக்குல மோடித்திரி சாரற்கொடுங் குன்றம்
நாகத்தொடு மிளவெண்பிறை சூடிநல மங்கை
பாகத்தவ னிமையோர்தொழ மேவும்பழ நகரே.

சம்பந்தர்.

ஆந்தை ‡

கற்றி லாதானைக் கற்று நல்லனே
காம தேவனை யொக்குமே
முற்றி லாதானை முற்ற னேயென்று
மொழியினுங் கொடுப் பாரிலை
பொத்தி லாந்தைகள் பாட்ட றுப்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்த னுயம ருலக மாள்வதற்
கியாது மையுற வில்லையே.

சுந்தரர்.

வேங்கை

மடந்தை பாகத் தடக்கிம்
மறையோதி வானோர் தொழத்
தொடர்ந்தநம் மேல்வினை தீர்க்க
நின்றார்க்கிட மென்பரால்
உடைந்த காற்றுக் குயர்வேங்கை
பூத்துதிரக் கல்லறைகண்மேல்
கிடந்த வேங்கை சினமா
முகஞ்செய்யுங் கேதாரமே.

சம்பந்தர்

இயற்கையிலுள்ள வெறுக்கக் கூடிய சந்துக்களை நமது சமயகுரவர்கள் எவ்வாறு விளக்கிக்காட்டுகின்றன ரென்பது மேற்கண்ட பாசுரங்களால் விளங்கும். இனி இயற்கையில் அழகுடன் வியக்கத்தக்க மிருகங்களும் பறவைகளும் எவ்வாறு தேவாரத்திற் காணப்படுகின்றன வென்பது சற்று ஆராய்வோம். அவை பதின்மடங்கு அழகுகொண்டு நாம் காணுது விட்ட ஒவ்வொரு எழிலும் எடுத்துக்காட்டப்பெறும். இம்மாதிரி வர்ணனைகள் பிற்காலத்தில் கம்பன் முதலிய கவிவாணருக்கு மாதிரிகளாய் நின்றன. அவையே இராமாயணம் முதலிய நூல்களிலும் ஐந்திணை வர்ணனைகளிலும் சிறிது சொற்றொடர்கள் மாற்றி அமைந்திருக்கக் காணலாம். இவ்வழகுப் பொருள்கள் தேவாரத்தில் எம்முறையில் பாடப்படுமென்பது சற்று நோக்குவோம்.

‡ மெய்த்தன்னுறும் வினைதீர்வகை தொழுமின்செழுமலரின்
கொத்தின்னொடு சந்தாரகில் கொணர்காவிரிக் கரைமேல்
பொந்தின்னிடை யாந்தை பல பாடும்புள மங்கை
அத்தன்னமை யாள்வா னிட மாலந்துறை யதுவே.

சம்பந்தர்.

அன்னம்

பலவு மன்னங்கள் பன்மலர்மேற் றுஞ்சும்;
கலவ மஞ்ஞைகள் காரென வெள்குறும்
உலவு பைம்பொழில் சூழ்திரு வொற்றியூர்
நிலவி னனடி யேபினை நெஞ்சமே.

திருவொற்றியூர் - திருக்குறுந்தொகை 7.

பண்டேழுலகுண்டானவை கண்டானுமுன்னறியா
ஒண்டீயுரு வானானுறை கோயின்னிறை பொய்கை
வண்டாமரை மலர்மேல்மட வன்னம்நடை பயில
வெண்டாமரை செந்தாதுதிர் வீழிம்மிழ லையே.

சம்பந்தர்.

மாசிலொள் வாள்போன் மறியு
மணிநீர்த் திரைத்தொகுதி
யூசலை யாடி யொண்காற்
சிறகன்ன முறங்க லுற்றூர்
பாசறை நீலம் பருகிய
வண்டு பண்பாடல் கண்டு
வீசுங் கெடில வடகரைத்தே
யெந்தை வீரட்டமே.

திருவதிகை - திருவிருத்தம் 1.

பொன்னமல்கு தாமரைப் போதுதாது வண்டினம்
அன்னமல்கு தண்டுறை யானைக்காவி லண்ணலைப்
பன்ன வல்ல நான்மறை பாட வல்ல தன்மையோர்
முன்னவல்லர் மொய்கழறுன்ன வல்லர் விண்ணையே

சம்பந்தர்.

அன்னங் கன்னிப் பேடைபுல்கி யோல்கி யணி
[நடையவாய்ப்*
பொன்னங்காஞ்சி மலர்ச்சின்ன மாலும்புகலூர்தனுள்
முன்னம்மூன் றுமதிலெரித்தமூர்த்திதிறங்கருதுங்கால்
இன்ன ரென்னப் பெரிதரிய ரேத்தச் சிறிதெளியரே

ஷை.

அன்னந்தாவு மணியார் பொழின் மணியார் புன்னை
பொன்னந்தாது சொரி பாதிரிப் புலியூர் தனுள்
முன்னந் தாவியடி மூன்றளந்த வன்னன் முகன்
தன்னந் தாளுற் றுணராததோர் தவநீதியே.

ஷை.

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.

திருப்பழனம் - பண் -பழந்தக்கராகம். 10.

அன்னமாம் பொய்கை சூழம்ப ரானை
யாச்சிரா மந்நகரு மானைக் காவும்
முன்னமே கோயிலாக் கொண்டான் றன்னை
மூவுலகுந் தானாய மூர்த்தி தன்னைச்
சின்னமாம் பன்மலர்க ளன்றே சூடிச்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தினானைக்
கன்னியம் புன்னைசூழ்ந்த ணைகைக்
காரோணத் தென்னான் றுங் காணலாமே.

திருநாகைக் காரோணம்- திருத்தாண்டகம் 4.

* முன்னைச் செய்வினை யிம்மையில்
வந்து மூடுமாதலின் முன்னமே
யென்னை நீதியக்கா தெழும்மட
நெஞ்சமே யெந்தை தந்தையூர்
அன்னச் சேவலோ டூடிப் பேடைகள்
கூடிச்சேரு மணிபொழில்
புன்னைக்கன்னி கழிக்கணாறும் புறம்பயந்
தொழப் போதுமே.

சுந்தரர்.

குறுந்தொகை

[886-வது பக்கத் தொடர்ச்சி]

கவைமகனார்] 324 [குறிஞ்சி

இரவுக்குறி வாராநின்ற தலைமகனுக்குத் தோழிதலைமகள் இற்செறிப்புற்றதை அறிவுறுத்தி இரவுக்குறி மறுத்து வரைவுகடாவியது.

கொடுங்கால் முதலைக் கோள்வ லேற்றை
வழிவழக் கறுக்குங் கானலம் பெருந்துறை
இனமீ னிருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி; இவடன்
மடனுடை மையி னுயக்கும்; யானது
கவைமக நஞ்சுண் டாஅங்
கஞ்சுவல், பெரும,என் னெஞ்சத் தானே.

(உரை). வளைந்த காலையுடைய கொலைசெய்யவல்ல ஆண்முதலை அவ்வழியே சனங்கள்போதலைத் தவிர்க்கும் கானலையுடைய பெரியதுறையின் அயலிலுள்ள சுறாமுதலிய பல கொடுமீன்களையுடைய கரியகழியை நீந்திக்கடந்து நீயோ உனது அன்புமிகுதியால் இரவுக்குறிநாடி வருகின்றனை; இவளோ தனது. அறியாமையால் (உனது களவுப் புணர்ச்சியை விரும்பி அது கிடைக்கப்பெறாமையின்)மிகவும் வருந்துகின்றாள்; இதனைக்கண்டு அணைத்தெடுக்கப்படும் இளங்குழந்தை நஞ்சுண்ணக்கண்ட தாயைப்போல, பெரும, நான் உள்ளநடுங்க அஞ்சுகின்றேன்.

கொடுங்கால்; கொடுமை - வளைவு. கோள் - கொலை. முதலையேற்றை - முதலையேறு; ஆண்முதலை. இவடன் - இவள் தன். உயக்கும் - வருந்துவாள். கவை - கவவுவதற்குரிய; தழுவி அகப்படுத்திக் கொள்வதற்குரிய. மக - மகவு, குழந்தை. இப்பாட்டைப் பாடியவரின் இச்சிறப்புப்பெயருக்குக் காரணமான 'கவைமக' என்ற இத்தொடரின் பொருட்சிறப்பு இன்னதென்று தெளியக்கூடவில்லை. 'கவைமக' வென்பதைக் 'கவைமா' எனப்பாடந்திரித்துக் 'கவயமா' என்பதின் மரூஉவாகவும், தலைமகன் காட்டிய தலையளி தலைமகளுக்குப் பெருந்தீங்கு பயக்குமென்றஞ்சிய தோழி அது நக்கிக்கொல்லும் ஆமாவினது நாவின் நஞ்சென்று கூறியதாகவும், பாடினோர்பெயர் 'கவைமானார்' என்பதாகவும், கொள்ளலாம் என்று ஊகித்தற்கிடமுண்டு. நெஞ்சத்தான் - நெஞ்சத்தில்.

நன்னாகையார்] 325 [நெய்தல்

தலைமகனது நெடும்பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி மெலிந்து உரைத்தது.

'சேறுஞ் சேறும்' என்றலிற் பண்டைத்தம்
மாயச் செலவர் செத்து மருங்கற்று
மன்னிக் கழிகென் றேனே; அன்னோ!
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ;
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குள மாயிற்றென் இடைமுலை நிறைந்தே.

(உரை). 'செல்லுதும், செல்லுதும்' என்று காதலர் அடிக்கடி சொன்னதால், அவ்வார்த்தை முன்போலப்

பொய்யான பிரிவைக் குறித்ததென்று கருதி, என் பக்கத் திருத்தலைத் தவிர்ந்து போகலாம் என்று விடைதந்தேனே; அந்தோ! எனக்குப் பற்றுக்கோடாயிருந்த எந்தை இப்போது எவ்விடத்து உள்ளானோ அறியேன்; எனது முலைகளி னிடைப்பட்ட மார்பகம் ஓயாதுசொரியுங் கண்ணீரால் கரிய கால்களையுடைய வெண்குருகுகள் மீனைமேயும் பெரிய குள மாயிற்று.

சேறும் - செல்தும். மாயச்செலவர் செத்து - பொய்ச் செலவினர் என்று நினைத்து. என்றேனே - என்றேன்; ஒ, அசை. அன்னோ - அந்தோ. 'ஆசா.........கொல்லோ' - இதே 176 - ம் பாட்டிலும் இவ்வடியே வந்துளது. அதன் உரைக் குறிப்பைப் பார்க்க. இடைமுலை - முலை யிடை.

326

[நெய்தல்]

சிறைப்புறத்தானைத் தலைமகன் கேட்டறியுமாறு தோழிக் குத் தலைமகள் தனது ஆற்றுத்துயரை எடுத்துரைத்தது.

துணைத்த தோகைப் பணைப்பெருந் தோளினர்
கடலாடு மகளிர் கான லிழைத்த
சிறுமனைப் புணர்ந்த நட்பே, தோழி,
ஒருநாட் டுறைவன் துறப்பிற்
பன்னாள் வரூஉ மின்னா மைத்தே.

(உரை). பூவிதழ்களைப் பிணைத்துக்கட்டிய கூந்தலையும், மூங்கிலைப்போன்ற பருத்த தோள்களையும் உடைய, கடற் கானலிடத்து விளையாடும், மகளிர் அக்கானலில் இழைத்த சிறு மனையிலே விளையாட்டாகத் துறைவனுடன் (முன் னர்) செய்த நட்பே, தோழீ, இப்பொழுது அவன் ஒருநாள் நம்மை விட்டகன்றானாயினும் பலநாளும் நீங்காது நம்மை வருத்துந் துன்பத்தைத் தருவதாயிற்று.

துணைத்தல் - பிணைத்துத் தொடுத்தல். தோகை - (ஆகு பெயர்) மயிலின் விரிந்த தோகையைப்போன்ற கூந்தல். சிற்றிலிழைத்து மணற்சோறட்டுத் தனது தோழிமாருடன் பேதைப்பருவத்தே தான் விளையாடியிருந்த ஞான்று துறைவன் அடிக்கடி அங்குவந்து தம்முடன் கொண்ட நட்பே பின்பு பெதும்பைப்பருவத்து அவனுடன் தான் களவிற்கூடிய கூட்டத்துக்கேதுவாய் இப்பொழுது பெருந் துயரத்தைவிளைத்ததென்பாள், 'சிறுமனைப் புணர்ந்த நட்பே, இன்னாமைத்து' என்றாள்.

அம்மூவனார்] 327 [குறிஞ்சி

சிறைப்புறத்து வந்து கேட்கும் அண்மையனாயிருந்த தலை மகனுக்குத் தனது துயரை அறிவுறுத்துவாளாய் அவன் மலை யிலிருந்துவரும் யாற்றை முன்னிலைப்படுத்திக் கூறியது.

நல்கின் வாழும் நல்கூர்ந்தோர் வயின்
நயனில ராகுதல் நன்றென வுணர்ந்த
குன்ற நாடன் தன்னினு நன்று
நின்னிலை கொடிதாற் றீங்க லுழுத
நம்மனை மடமகள் இன்ன மென்மைச்
சாயலள், அளியள், என்னாய்
வாழைதந் தனையாற் சிலம்புபுல் லெனவே.

(உரை). இனிய மலைப்பாறை தேயும்படி உழுதாற் போலக் குடைந்துவருங் கான்யாறே, நீ 'இவள் நமது மனை யில் வளர்ந்த இளமகள், இத்தகைய மெத்தென்ற சாய லள், ஆதலின் நம்மால் அளித்தக்கவள்' என்று கருதா யாகி மலையிடமெல்லாம் பொலிவழியும்படி வாழைகளைப் பறித்து அடித்துக்கொணர்ந்து தந்தாயாதலின், பிறர் தராவது கொடுத்தால் (அதைக்கொண்டு) வாழும் வறியோர் [illegible] நற்செயலென் றுணர்ந்தொழுகுந் தலை

மகன் செயலைக்காட்டிலும், உனதுசெய்கை மிகவும் கொடி தாயிராநின்றது.

நன்று கொடிது - மிகவும் கொடியது; ஆல் - அசை. தீங்க லுழுத - 'தீங்கல் உழுத யாறே' என்று ஒருசொல் வரு விக்க; 'தீங்கலுழுதோய்' என்று பாடமோதுவாருமுளர். 'மட மகள், சாயலள், அளியள்' என்றது வாழையை. சாயல் - மென்மை.

எதிலாராகிய எளியவர்க்கு உதவிபுரியாதிருத்தலினும், உற்றார்க்கு உறுகண் உஞற்றல் மிகக்கொடிதாதலின், 'நாடன் தன்னினும் நின்னிலை கொடிது' என்றாள் என்க.

பரணர்] 328 [நெய்தல்

வரைவிடைவைத்துத் தலைமகன் பிரிந்தவிடத்து ஆற் றாத்துயரால் வேறுபட்ட தலைமகள் தோழிக்குக் கூறியது.

சிறுவீ ஞாழல் வேரளைப் பள்ளி
அலவன் சிறுமனை சிதையப் புணரி
குணில்வாய் முரசி னிரங்குந் துறைவன்
நல்கிய நாடவச் சிலவே; அலரே,
வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோர் குறழனிலை கண்ட
கலிகெழு குறும்பூ ரார்ப்பினும் பெரிதே.

(உரை). சிறிய பூக்களையுடைய ஞாழல்மரத்தின் வேரி டத்து வளையாகிய அலவனது துயிலிடமான சிறுவீடு சிதையும்படி கடலானது குறுந்தடியாலடிக்கப்பட்ட முர சைப்போல ஒலிக்குந் துறைவனாகிய தலைமகன் நம்முடன் கூடித் தண்ணளிபுரிந்த நாளோ மிகச் சிலவே; அதனால் ஊராரெடுத்த அலரோ, வில்லைப் பிடித்த சேனை வீரராகிய விச்சியருக்குத் தலைவனும் பாணராற் பாடப்பெற்றவனு மாகிய புலியையொத்த 'குறழன்' என்பவன் வேந்தர் பல ருடன்பொருதநாள் அவனது வீரநிலையைக்கண்டு செருக் குற்ற குறும்பூரிடத்து உண்டான ஆரவாரத்தைக் காட்டி லும், மிக்கெழுந்து பரவலாயிற்று.

அலவனது வேரளைப்பள்ளியாகிய சிறுமனை, என்க. குணில் - பறையையடிக்குஞ் சிறுதடி. நாள், தவச்சில - மிகச்சில; அலரே ஆர்ப்பினும் பெரிதே, என்க. விச்சியர் பெருமகனாகிய 'குறழன்' இன்னானென்றும், அவன் வேந்த ரொடு பொருத வரலாறும், 'குறும்பூர்' என்பது எதுவென் றும் விளங்கவில்லை. 'நாள் தவச்சிலவே, அலர் ஆர்ப்பினும் பெரிதே' என்பதனோடு,

கண்டது மன்னும் ஒருநாள்; அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

என்ற திருக்குறள் ஒருபுடை ஒத்திருத்தல் காண்க.

ஓதலாந்தையார்] 329 [பாலை

தலைமகனது பிரிவிடை ஆற்றாது மெலிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

கான விருப்பை வேனில் வெண்பூ
விளிபொரு நெடுஞ்சினை யுஞற்றலின் ஆர்கழல்பு
களிறுவழங்கு சிறுநெறி புதையத் தாஅம்
பிறங்குமலை யிருஞ்சுர மிறந்தவர்ப் படர்ந்து
பயிலிரு ணடுநாட் டுயிலரி தாகித்
தெண்ணீர் நிகர்மலர் புரையும்
நன்மலர் மழைக்கணிற் கெளியவாற் பனியே.

(உரை). காட்டினிடத்துள்ள இருப்பையின் வேனிற்கா லத்துப் பூக்கும் வெளியமலர் காற்றுதாக்கிய நீண்டகிளை அசைத்தலால் காம்பினின்று கழன்றுதிர்ந்து யானைகள் பயிலும் சிறுநெறி மறையும்படி பரந்த, மலைகளோங்கிய

பெரியசுரத்தைக் கடந்துசென்றவரை நினைத்து, இருள்மிக்க நடுநிசியில் துயிலின்றித் தெளிந்த நீர்ச்சுனையிலுள்ள ஒளி பொருந்திய நெய்தல்மலரை யொத்தனவும் மழைபோலக் கண்ணீரைச் சொரிவனவுமான எனது கண்களாகிய தாம ரைமலருக்குப் பனிக்காலம் எளியவாகும்.

ஆர் - காம்பு. தாஅம் - பரவும். படர்ந்து - நினைந்து. அரி தாகி - இன்மையாகி; அருமை - இன்மை. நிகர் - ஒளி. நன் மலர் - தாமரைமலர். எளிய - 'அரிய' என்னும் பொருள் தந்துநிற்குங் குறிப்புமொழி. பனி - பனிக்காலம்; அது, முன்பனிக்காலம், பின்பனிக்கால மென இரண்டாதல் பற்றி 'எளிய' என்று பன்மைவினை கொடுத்தார். ஆல் - அசை.

வேனிற்காலத்திற் பிரிந்துசென்ற தலைமகன் குறித்த கார்காலத்தில் வாராமையால் துயிலற்று வருந்திய கண்கள் பனிக்காலத்திலும் அவன் வாரானாயின் இன்னும் அதிக மாய் வருந்தும் என்பாள் 'மழைக்கணிற் கெளியவாற் பனி யே' என்றாள்.

கழார்க் கீரனெயிற்றியனார்] 330 [முல்லை

தலைவனது நெடும்பிரிவிடை அருந்துயருற்றுத் தனித் திருந்த தலைமகள் தோழிக்குத் தனதாற்றாமை புலப்படக் கூறியது.

நலத்தகைப் புலைத்தி பசைதோய்த் தெடுத்துத்
தலைப்புடை போக்கித் தண்கயத் திட்ட
நீரிற் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும்
பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ
இன்கடுங் கள்ளின் மணவில் கமழும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல், தோழி, அவர் சென்ற நாட்டே.

(உரை). நல்ல கைகளையுடைய வண்ணாத்தி கஞ்சிப்பசை யிலே தோய்த்தெடுத்து இருதலையையும் கல்லிற் புடைத் துக் குளிர்ந்தகுளத்திற் போகட்டு நீரை முற்றும் பிழியாதெ டுத்துக் கரையிலே முறுக்கோடு வளையமாகப் போட்டபெரிய வெள்ளையறுவைகளைப் போன்ற அகன்ற இலைகளொடு கூடிய பகன்றையின் இதழ்விரிந்துமலர்ந்த வெளியபூ இனிய கடுமையான கள்ளின் மணத்தோடு கமழுங்கால மாகிய துன்பத்தைத்தரும் மாலைப்பொழுதும் தனிமையுற் றோர் படுந்துயரமும், நங்காதலர் சென்ற நாட்டில் இல்லை யோ? (இருந்தால் நம்மைப்போல அவரும் வருத்தமுற்று நம்மை நினைத்து இங்கு வாராதிரார்.)

நலத்த கை - அறுவையின் மாசைப் போக்கும் நற்றொழி லைச் செய்யுங் கை; நலத் தகை என்று பிரித்துரைத்தல் புலைத்திக் கேலாமை காண்க. புலைத்தி - வண்ணாத்தி. பசை - கஞ்சிப்பசை. வண்ணாத்தி துகில்களை கஞ்சியிற்றோய்த்து மாசுபோக்கி வெளுத்தலையும், அவளுக்குப் 'புலைத்தி' யென் னும் பெயருண்மையையும்,

ஆடைகொண் டொலிக்குநின் புலைத்தி-(மருதக்கலி, 7)
அறனில் புலைத்தி யெல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கம்-(நற்றிணை, 90)
பசைகொல் மெல்விரற் பெருந்தோட்புலைத்தி-(அகம், 34)

இவற்றால் தெளிக. தலைப்புடை - இருதலையையும் (தலைப் பையும்) அடித்து ஒலித்தல். புடைபோக்கி - புடைத்தலைச் செய்து. பரூஉ - பெரிய. திரி - முறுக்கிச் சிறிது நீரைப் பிழிந்து சுருணையாகப் போட்ட துணி. பகன்றை - வெள்ளி வள்ளத்தைப் போல வெண்மையான, வட்டமான பெரிய பூக்களையுடைய 'சிவேதை' யென்னுங்கொடி, ஈங்கை முத லிய புதல்மீது படர்ந்து முன்பனிக்காலத்தில் அந்திநேரத் தில் பூப்பது. இவற்றைப் பின்வரும் மேற்கோள்களான் அறிக:

வெள்ளிதழ்ப்
பகன்மதி யுருவிற் பகன்றை மாமலர்
வெண்கொடி யீங்கைப் பைம்புத லணியும்
அரும்பனி யளை இய கூதிர் - (ஐங்குறு, 456)

பாசிலைப் பொதுளிய புதலொறும் பகன்றை
தோலெறி பாண்டிலின் வாலிய மலர
அற்சிரம் வந்தன்று—(அகம், 217)

பகன்றை வான்மலர் பனிநிறைந் ததுபோல்
பால்பெய் வள்ளம்—(அகம், 219)

அகன்றுறை யணிபெறப் புதலொடு தாழ்ந்த
பகன்றைப்பூ வுறநீண்ட பாசடைத் தாமரை
கண்பொர வொளிவிட்ட வெள்ளிய வள்ளத்தால்
தண்கமழ் நறுந்தேற லுண்பவள் முகம்போல
வண்பிணி தளைவிடூஉம் வயல்—(மருதக்கலி, 7)

புலம்பு - தனிமை; இங்குத் தனிமையுற்றோர் படுந்துயரத் துக்குஆகுபெயர். மணவில்—மணவால்மணத்துடன்; மணவு - மணத்தல். 'மணமில' கமழும் என்ற பாடம், 'இணைபட நிவந்த' என்ற மருதக்கலியின் (8) உரையில் நச்சினார்க் கினியர் 'மணமில்லாத பகன்றைப்பூ' என்றெழுதியதற்குப் பொருந்தியதாயிருப்பினும், 'இன்கடுங்கள்ளின் மணமில கமழும்' என்ற சொற்றொடரை உற்று நோக்குங்கால், 'இன் கடுங்கள்ளின்' என்ற உபமானமும், 'கமழும்' என்றவினையும் 'மணமில' என்பதனோடு முரணி நிற்றலின் இப்பாடம் ஏற் புடைத்தெனத் தோன்றவில்லை. 'இன்று' என்பதை 'மாலை யின்று', புலம்பு இன்று' என்று தனித்தனிக் கூட்டுக.

'தலைப்புடைப் போக்கி' என்றும் பாடம். 'பரூஉக்கிரி' என்ற பாடம் பொருட்பேறிலது.

வாடாப்பிரமந்தனார்] 331 [பாலை

தலைமகன் பொருள்வயிற் பிரியக்கருதியதைப் பல குறிப் பாலுணர்ந்து வேறுபட்டதலைமகளைத் தோழி தேற்றியது.

நெடுங்கழை திரங்கிய நீரி லாரிடை
ஆறுசெல் வம்பலர் தொலைய மாறுநின்று
கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணும்
கடுங்கண் யானைக் கான நீந்தி
இறப்பர்கொல், வாழி தோழி, நறுவடிப்
பைங்கண் மாஅத் தந்தளி ரன்ன
நன்மா மேனி பசப்ப
நம்மினுஞ் சிறந்த வரும்பொரு டாற்கே.

(உரை). தோழீ, நமது மாவின் வாசனைபொருந்திய வடுவைப்போன்ற பசிய கண்களும், அழகிய தளிரையொத்த நல்ல மாமைநிறத்தோடு கூடிய மேனியும் பசப்புறும்படி செய்துவிட்டு நம்மைக்காட்டிலும் சிறந்த பொருளை ஈட்டிக் கொணர்தற்காக, நீண்ட மூங்கில்கள் உலரும்படி நீரற்ற அரிய காட்டுவழியில் வழிப்போவாராகிய அன்னியநாட் டாரை மரியும்படி எதிர்த்துநின்றுதாக்கி அவருடைய பொருள்களைக் கொள்ளைகொண்டு உண்பதும், அஞ்சாத யானைகள் இயங்குவதுமான, கானத்தை அரிதிற் கடந்து தலைவர் சென்றிடுவார்கொல்லோ.

திரங்கிய - உலர்ந்த. கடறு கூட்டுண்ணும் - காட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டுண் ணும். கடறு - காடு. கூட்டுண்ணல் - கொள்ளைகொண் டுண்ணல்; 'கானவர் கடறு கூட்டுண்ணும் அருஞ்சுரம்' என்றார் பத்துப்பாட்டினும் (பெரும்பாண் - 116). கடுங் கண் - தறுகண்மை, அஞ்சாமை. வடி - மாவடு, மாம்பிஞ்சு. 'மாஅத்து' என்பதை 'வடி', 'தளிர்' இரண்டோடுங் கூட்டுக.

மதுரை மருதங்கிழார்மக
னார் இளம்போத்தனார் } 332 { குறிஞ்சி

வரையாது ஒழுகாநின்ற தலைமகன் இரவுக்குறி நயந்து வந்து சிறைப்புறத்தானாக, அதனையுணர்ந்த தலைமகள் அவன்கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

வந்த வாடைச் சில்பெயற் கடைநாள்
நோய்நீந் தரும்படர் தீர நீநயந்து
கூறி னெவனோ, தோழி, நாறுயிர்
மடப்பிடி தழீஇத் தடக்கை யானை
குன்றச் சிறுகுடி யிழிதரும்
மன்ற நண்ணிய மலைகிழ வோனே.

(உரை). தோழீ, வாடைக்காற்று வந்து வீசிய சிறிது மழை தூவுதலோடு கூடிய மழைக்காலத்திறுதியில் எனது காமநோயினது தாங்கற்கரிய வருத்தம் தீருமாறு நீ, உயிர்ப்புவீங்கிய இளம்பிடியைத் தழுவிப் பருத்த கையையுடைய யானை குன்றினிடத்துச் சிறுகுடிக் குறிச்சியின்கண் இறங்கும் தோட்டங்களின் நடுவிடத்தையுடைய மலைநாடனுக்கு, 'இனி இக்களவொழுக்கந் தவிர்ந்து தலைமகளை வரைந்துகொள்' என்று நயந்து கூறினால், என்ன ஆய்விடும் உனக்கு?

நோய்-காமநோய். நாறு உயிர்-உயிர்நாறு; உயிர்-உயிர்ப்பு; மூச்சுவிடுதல். மன்றம் - தோட்டம், ஊர், இவற்றின் நடுவிடம். கிழவோன் - கிழவோற்கு, என்று நான்கனுருபு விரித்துக் 'கூறின் எவனும்' என்பதனோடு கூட்டுக.

உழுந்தினைம்புலனார்] 333 [குறிஞ்சி

அறத்தொடுநின்று மறையை வெளிப்படுத்தலே இனி நலமாம் என்று தோழி தலைமகளுக்குக் கூறியது.

குறும்படை பகழிக் கொடுவிற் கானவன்
புனமுண்டு கடிந்த பைங்கண் யானை
நறுந்தழை மகளி ரோப்புங் கிள்ளையொடு
குறும்பொறைக் கணவுங் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம் வீடத்
துணியி னெவனோ தோழிநம் மறையே.

(உரை). தினைப்புனத்தில் உண்ணப்புகுந்தபோது வலிபொருந்திய பகழியையும் வளைந்த வில்லையும் ஏந்திய மறவனால் ஓறுத்து விலக்கப்பட்ட யானை, நல்ல தழையுடையை உடுத்த மகளிரால் ஓட்டப்பட்ட கிளியோடு மலையை நோக்கிச் செல்லும் குன்றநாடனது காரியம் முடிவுபெறாது குறையுற்றமையாலான வருத்தங்கெட, நமது மறையான ஒழுக்கத்தை வெளியிடத்துணிந்தால் என்ன கெடுதி உண்டாம்? (கெடுதியொன்றும் உண்டாகாது, நன்மையே உளதாகும்).

குறும்பு - வலி. அடை - அடைந்த, பொருந்திய. 'குறும்படைப்பகழி' என்ற பாடத்துக்கு சிறு படையாகிய பகழி என்க. புனமுண்டு - புனமுண்ண; இதை யானைக்கும் கிளிக்கும் ஏற்றுக. பைங்கண் - வருத்தத்தால் பசுமையுற்ற கண். நறும்-நல்ல, அழகிய. தழை-(ஆகுபெயர்) தழையுடை. ஓப்பும் - ஓட்டும். அணவும் - நோக்கிச் சென்று சேரும். பணி-காரியம், வேலை; இங்குத் தலைமகளை இடையீடின்றிக் கூடுதல். துணியல் - வெளிப்படுத்தத் துணிதல். மறை - களவொழுக்கம்.

உள்ளுறை:—தினையை உண்ணப்புக்க யானையைக்கானவரும் கிளியைக் காவல்மகளிரும் கடிந்து விலக்கியபோது அவையிரண்டும் ஒன்றுசேர்ந்து குறும்பொறைக்கு அணவியதைப்போலக் களவுப்புணர்ச்சி இடையீடுபட்டுத் தமையன்மாரால் தடுக்கப்பட்ட தலைமகனும் தாய்மாரால் தகையப்பட்ட தலைமகளும் உடன்போக்கைத் துணிந்தனர் என்றவாறு.

இளம்பூதனார்] 334 [நெய்தல்

ஊராரெடுத்த அலர் அடங்குமாறு ஒருவழித்தணந்த தலைமகனது பிரிவிடை, 'ஆற்றகிற்றியோ' வென்று தன்னை வினவிய தோழிக்குத் தலைமகள் தனதாற்றாமைபுலப்படக் கூறியது.

சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பைந்தோ
டெறிதிரைத் திவலை ஈர்ம்புற நனைப்பப்
பனிபுலந் துறையும் பல்பூங் கானற்
பெருநீர்ச் சேர்ப்பன் நீப்பின், ஒருநம்
இன்னுயி ரல்லது பிறிதொன்
றெவனோ, தோழி, நாமிழப் பதுவே.

(உரை). தோழீ, கழுத்தில் சிறிது வெண்மையையும், செவந்த வாயையும் உடைய இளங்காக்கையின் தொகுதி அலைவீசு நீர்த்திவலை தமது ஈரமான புறத்தை நனைத்தலால் குளிர்ச்சியால் வருந்தி உறையும் பலவகைப் பூக்களையுடைய கானல் சார்ந்த கடற்சேர்ப்பன் நம்மைத் துறந்துவிடின் நாம் நமது இனியவுயிராகிய ஒருபொருளை இழப்பதையன்றிப் பிறிது நமக்குளதாம் நஷ்டம் யாவதோ?

தோடு - தொகுதி, கூட்டம். பனி - (ஆகுபெயர்) குளிர்ச்சி. பெருநீர் - கடல்; 'விரிநீர்ச்சேர்ப்பன்' என்பது வேறொரு பாடம்.

உள்ளுறை:— காக்கைக் கூட்டம் திரைத்திவலையால் நனைப்புண்டு குளிரால் வருந்தி உறைவதுபோலத் தலைமகளும் அவள்தன் தோழியும் தலைமகனது பிரிவாலும், அது காரணமாகப் பிறந்த அலராலும் வருந்தி உறைந்தார் என்றதாம்.

இருந்தையூர்க்கொற்றன்
புலவனார் } 335 { குறிஞ்சி

இரவுக்குறி நயந்துவந்து சிறைப்புறத்தானை தலைமகனுக்குத் தலைமகள் இற்செறிப்புற்றதை உணர்த்துமாறு தலைமகளுக்குத் தோழி சொல்லியது.

நிரைவளை முன்கை நேரிழை மகளிர்
இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து
பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்
வெற்பன் நண்ணி யதுவே வார்கோல்
வல்விற் கானவர் தங்கைப்
பெருந்தோட் கொடிச்சி யிருந்த வூரே.

(உரை). வரிசையாக வளைகளையணிந்த முன்கையையும் அழகான அணிகலன்களையும் உடைய மகளிர் அகன்ற கருங்கற்பாறையின்மேல் செந்தினையை உலர்த்துவதற்காகப் பரப்பிவிட்டுச் சுனையாடிநின்ற காவல்நெகிழ்ந்த சமயம்பார்த்துப் பசிய கண்ணையுடைய பெண்குரங்கு தனது குட்டியுடன் மரக்கிளையினின்று இறங்கித் தினையைக்கவர்ந்துண்ணும் மலைநாடன் அணுகலுற்றது, நீண்ட பகழியையும் வலிய வில்லையும் உடைய குன்றவாணர் தங்கையான பெரியதோளையுடைய குறமகளாகிய நீ இருக்கும் இவ்வூரே.

வியல் - அகன்ற, விசாலமான அறை-பாறை. சோர்வு இடை - காவல் சோர்வுற்ற சமயம். சினை-மரக்கிளை. பைங்கண் - (பசியால்) பசந்த கண். பார்ப்பு - குட்டி. கொடிச்சியிருந்த-கொடிச்சியாகிய நீஇருந்த; முன்னிலையாளைப்படர்க்கைப்படுத்திக் கூறியது. 'வார்வில்...தங்கை' என்றமையால் தமையன்மார் காவலின் வன்மையையும், 'இருந்த' என்றமையால் இற்செறிப்புற்றதையும் குறிப்பித்தவாறும்.

உள்ளுறை:-மகளிர் வியலறையிற் பரப்பிய செந்தினையை அற்றம்நோக்கி மெல்ல வந்து மந்தி பார்ப்புடன் கவரும் என்றது, தலைமகளை உடன்கொண்டு விளையாடச்சென்ற தோழிமார் அவளைப் பொழிலகத்தே பூப்பறிக்கவிட்டுத் தாமகன்று அயர்ந்திருந்தகாலையில் பாங்கியுடன் அங்குத் தலைமகன் எதிர்ப்பட்டு அவள்நலத்தைக் களவில் கவர்ந்துண்டான் என்பதாம்.

குன்றியனார்] 336 [நெய்தல்

வரைந்துகொள்ளாது இரவுக்குறி நயந்தொழுகிய தலைமகனைத் தோழி களவொழுக்கந்தவிர்ந்து வரைந்துகொள்ளுமாறு தெருட்டியது.

செறுவார்க் குவகை யாகத் தெறுவர
ஈங்கினம் வருபவோ, தேம்பாய் துறைவ
சிறுநா வொண்மணி விளரி யார்ப்பக்
கடுமா நெடுந்தேர் நேமி போகிய
இருங்கழி நெய்தல் போல
வருந்தினள், அளியள், நீ பிரிந்திசி னோளே.

(உரை). இடமகன்ற கடற்சேர்ப்ப, (அலர்தூற்றிப் பழிக்கும்) பகைவர்க்கு மகிழ்ச்சியுண்டாக, நண்பருக்குத் தீங்கிழைப்பவர், இவ்விடத்து இன்னும் வருவாரோ? சிறிய நாக்கையும் ஒளியையுமுடைய மணிகள் விளரிப்பண்ணைப் போன்றொலிப்ப விசையான குதிரைகள் பூட்டிய நெடுந்தேரினுருளை மீதூர்ந்த பெருங்கழியிலுள்ள நெய்தல்மலரைப் போலச் சிதைவுற்று வருந்தினள் நீ கைவிட்டகன்ற தலைமகள்; ஆதலால் அவள் உன்னால் அளிக்கப்படத்தக்கவள். (இனி இக்களவொழுக்கினை விரும்பி இங்குவருதலைத் தவிர்ந்து அவளை வரைந்து கொண்டு அருள்புரிவாயாக.)

செறுவார் - பகைவர். தெறுவார் ஈங்கு 'செய்பவர்; தெருவர்' என்பதுமொருபாடம். தேம் - இடம். பாய் - பாய, பரவிய, பரந்த; (ஞாழல், புன்னை முதலிய மரங்களின் பூவிடத்துள்ள) தேன்பாய்ந்த, என்றுமாம். விளரி - விளரிப்பண்; இதைச் செத்தார்க்குப் பாடும் 'சாப்பண்' என்பர் 'புறப்பொருள் வெண்பாமாலை' உரையாசிரியர்.

தளிரியல் தாய்புதல்வர் தாமுண ராமைக்
களரிக் கனல்முழங்க மூட்டி - விளரிப்பண்
கண்ணினார் பாணர் களிறெறிந்து வீழ்ந்தார்க்கு
விண்ணினார் செய்தார் விருந்து—(தும்பை - 11)

என்ற வெண்பாவின் உரையைப்பார்க்க. கடுமா - கடிய குதிரை. பிரிந்திசினோள் - பிரிந்தவள்.

போதுக்கயத்துக் கீரந்தையார்] 337 [குறிஞ்சி

தலைமகன், தான் இரந்துபின்னின்ற தோழி தலைமகள் பருவம்நிரம்பாப் பேதையள் என்று சொல்லிக் குறைமறுத்தாளுக்குத் தலைமகளின் முதுக்குறைவை எடுத்துச் சொல்லியது.

முலையே முகிழ்முகிழ்த் தனவே; தலையே
கிளைஇய குரலே கிழக்குவீழ்ந் தனவே;
செறிநிறை வெண்பலும் பறிமுறை நிரம்பின;
சுணங்குஞ் சிலதோன் றினவே; அணங்குதற்
கியான்றன் னறிவலே; தானறி யலளே;
யாங்கா குவள்கொல் தானே
பெருமுது செல்வ ரொருமட மகளே.

(உரை). (கண்டாரைக் காமநோயூட்டி) வருத்தும் பொருட்டு முலைகள் அரும்பலுற்றன; தலையிலே தோன்றிய மயிர்த்திரள் நீண்டு வளர்ந்து கீழே தொங்கலுற்றது; வரிசைபெறச் செறிந்த வெண்பற்கள் விழுந்து எயிறுகள் முளைத்து நிரப்பலுற்றன; தேமல்களும் அங்குமிங்குமாகச் சில தோன்றலுற்றன; அவளை நான் அறிவேன்; ஆனால் அவள் என்னை அறிந்திலள். பெருமுதுசெல்வரின் ஒரு மடமகளாகிய அவள் எவனுக்குரியவளாவளோ, யான் அறியேன்.

முகிழ் முகிழ்த்தன - கோங்கரும்பைப்போல அரும்பின. கிளைஇய - கிளைத்த, முளைத்த, தோன்றிய. குரல் - மயிர்த்திரள் அல்லது கொத்து. கிழக்கு - கீழாக, கீழ்நோக்கி. பறிமுறை - விழுந்தமுறை. நிரம்பின - புதிய எயிறுகள் முளைத்து நிரம்பின. அணங்குதற்கு - நோய் செய்வதற்கு, வருத்துவதற்கு; அணங்குதற்கு முகிழ்த்தன, வீழ்ந்தன, நிரம்பின, தோன்றின என்க. தன் அறிவல் - தன்னை (அவளை) நான் அறிவேன். யாங்கு ஆகுவள் - எவ்விடத்து வாழ்க்கைப்படுவள்; எவனுக்கு உரிமையாவள்.

நறுமுலை நேர்முகை யொப்ப நிரைத்த
பறிமுறை பாராட்டி னாய்மற்றெம் பல்லின்
செறிமுறை பாராட் டினையோ—(22)

என்ற பாலைக்கலியில் இச்சொற்றொடர்கள் அமைந்திருத்தல் காண்க.

பெருங்குன்றூர்கிழார்] 338 [முல்லை

குறித்த பருவத்தில் வினைவயிற்பிரிந்த தலைமகன் வாராமையால் வருந்திய தலைமகளைத் தோழி, 'உதுக்காண் அவர் வருந்தேர்' என்று கூறித் தேற்றியது.

திரிமருப் பிரலை யண்ண னல்லேறு
றரிமடப் பிணையோ டல்குநிழ லசைஇ
வீததை வியலரிற் றுஞ்சிப் பொழுதுசெலச்
செழும்பய று கறிக்கும் புன்கண் மாலைப்
பின்பனிக் கடைநாட் டண்பனி யச்சிரம்
வந்தன் று பெருவிற றேரே, பணைத்தோள்
விளங்குநக ரடங்கிய கற்பின்
நலங்கே ழரிவை புலம்பசா விடவே.

(உரை). முறுக்குண்ட கொம்பையுடைய சிறந்த நல்ல கலைமான் தனது மெல்லிய இளம்பிணையுடன் சிறிது நிழலுள்ள இடங்களில் இளைப்பாறிச் சென்று மலர்கள் நெருங்கிய அகன்ற தூறுகளினகத்தே துயின்று (நண்பகற்பொழுதைப்போக்கி)பொழுதுசெல்ல, செழித்த பயற்றஞ்செடியைக் கடித்துத் தின்னும் பின்பனிக்காலத்தை இறுதியிலேயுடைய குளிர்ந்த பனியோடுகூடிய முன்பனிக்காலத்தில் (தனித்தார்க்கு) துயரை விளைக்குமாலைப்பொழுதில் பருத்த தோள்களையும் ஊரெங்கும் இடமின்றிப் புகழ்பரந்த விளங்கும் கற்பினையுமுடைய நலம்பொருந்திய அரிவையாகிய நினது தனிமையுந் தளர்ச்சியும் நீங்குமாறு பெரிய வீரனாகிய தலைமகனின் தேர் அதோ வந்ததுகாண்.

அரி - மென்மை. மடம் - இளமை. அல்கு - குறைந்த, சிறிதாகிய. அசைஇ-இளைப்பாறி. வியல் -அகன்ற. அரில்-சிறுதூறு. அச்சிரம்-முன்பனிக்காலம்; இதற்கடுத்தது பின்பனிக்காலம். மாலை அச்சிரம் - அச்சிரமாலை என்று மாற்றிக் கொள்க. பெருவிறல் - (அன்மொழித்தொகை) மிக்க வலியை யுடையவன்; இங்கு வினைவயிற் சென்று வென்று மீண்ட தலைவன். பெருவிறல் தேர் - (ஆறும்வேற்றுமைத் தொகை) பெருவிறலின் தேர். நகரடங்கிய விளங்குகற்பு. புலம்பசா - உம்மைத் தொகை, புலம்பும் அசாவும்.

ஆஸ்கார் ஒயில்டின் அருமை வாக்கியங்கள்

[ஆஸ்கார் ஒயில்டு என்னும்பேர் பெருமையெய்தப் பிறந்த அறிஞன் 'கலா நிலய' நேயர்களுக்குப் புதியவனல்லன். அவனது கொள்கைகளும், அக்கொள்கைகளிற் கொண்டுய்க்கும் நெறிமுறையும் பெரும்பாலும் கலாநிலயத்துடன் ஒத்துநடப்பதால், அன்னான் பொருளுரைகளின் சிலவற்றை மீண்டும் ஈண்டு மொழிபெயர்த்துத் தருகின்றோம்.]

இதுபோது, மனிதர்களுடைய நலத்திற்கென்றும், நாட்டின் சிறப்பிற்கென்றும், அரசியற்றுறையிலும் சமுகநிலையிலும் முயற்சிகள் பலமேற்கொள்ளலாகின்றன. இகலும் பொருதொழிலும், அன்னவற்றிற்குரிய சாதனங்களாய சேனையும் ஆயுதங்களும் உலகத்தினில் இல்லாமற்போகவும், உன்நாடு என்நாடு என்று மனிதர் தம் சிறுமதியால் வகுத்த எல்லையைக் கடந்து எல்லோரும் சகோதரராய் வாழ்ந்து அமையவும், அரசாங்கங்களும் இராஜதந்திர நிபுணர்களும் ஒன்றுசூழ்ந்து ஸர்வதேசசங்கங்களை நிறுவவும், போர்ப்படை யளவினை வரையறுக்கவும் கூடிக்கூடிப் பேசிப்பேசி விருந்துகள் உண்டுகளித்துப் பின்னர்க் கலைவதுமாய் நடக்கலாகும்காரியங்களெல்லாம் பிள்ளைமதியின்விளையாட்டே யல்லாமல் பயனுடைய கருமங்களாகாவென்னும் வாய்மையைப் புலவர்பெருமகன் ஆஸ்கார் ஒயில்ட் தனக்கேயுரிய அரியதோர் வழியில் காட்டுகின்றார். அவைகளிற் சில வாசகங்கள் வருமாறு:—

"உலக சகோதரதத்துவத்தை மாந்தர் அறியுமாறு செய்துவிட மான்செஸ்டர் வியாபாரிகள் மிக முயன்றனர். அன்னதற்கு அவர் கைக்கொண்ட சாதனமோ என்னவெனில்—வியாபாரம். எந்நாட்டினராயினும் மனிதன் மனிதனே என்ற தத்துவத்தை உணர்ந்து மாந்தர் அனைவரும் வாழ்வாரேல், அதனால் எல்லோர்க்கும் நிறைந்த நன்மையுண்டு; எங்கும் அமைதி நிலைக்கும்; நிலைக்கின்ற இவ்வமைதியால், எல்லா நாட்டினரும், செவ்வியமுறையில் இடையூறு ஒன்றுமிலாது வியாபாரம் செய்யலாம். எல்லாநாட்டிலும் வர்த்தகமும் கைத்தொழிலும் வளரலாகும்' என்றென்று இப்படியெல்லாம் முயன்றனர் அக்கடைக்காரர்கள். என்ன பேதைமையிது! கண்களால் காணவல்லார் யாவரும் வியக்கும்வகை ஆண்டவன் படைத்துள இவ்வுலகத்தை, விற்பவர் வாங்குபவர் தங்களுக்கு உதவியாகும் ஒரு சந்தையேயென இழித்துவிட விரைகின்ற இவ்வார்வத்தை என்னென்று இயம்புவது! இச் சந்தைக் கடைப் பிள்ளைமதி அந்தப் பயனையேனுந் தந்ததோ! இம்முயற்சி மனிதனது இழிதகைமையை (Lowest Instinct in Man) தொடர்ந்து நடப்பதாகுமே. எனின், சிறுமையொன்றால் நற்பயனை எய்துவிக்கவியலுமோ, சொல்வீர். எத்தனை எத்தனை யுத்தங்கள் நிகழ்ந்திருக்கின்றன. நின்றவொரு போரை எத்தனை போர்கள்தொடர்ந்திருக்கின்றன. கடைக்காரர் நிறுவிய சந்தைக்கடை ஏற்பாடு, ஜெர்மனிக்கும் பிரான்ஸிற்கும் இடையே கடும்போர் நிகழாமற் காத்ததோ; இல்லையே.

* * *

"இக் கடைக்காரப் பிள்ளைகள் போகட்டும். உலக சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள வேறு ஒரு சாராரும் இருக்கின்றனர். அவர் கைப்பற்றும் சாதனமோ வாய்ப்பேச்சு. சில பேசுவதால், சில விதிப்பதால், சில விலக்குவதால் வேண்டியவெல்லாம் பெற்றுவிடலாம் என்று விம்முகின்றனர். அன்னவர் செய்வது தான் என்ன. சங்கமாக (Society) எங்குஞ் சூழ்ந்துவிடுகின்றனர். படையும் ஆயுதமும் இல்லாதஉலகமாக இம் மாநிலத்தை மாற்றிவிட வல்லார்போல் பற்பல முறைகளை நிறுவப்புகுகின்றனர். இந்த முறைகளில் நம்பிக்கை உலகசரித்திரத்தைபடித்தறியக்கூடிய புத்தியில்லாப் பாமரர்களிடந்தான்பரவுவதல்லால் நிகழ்வது யாது? அப்பாமரர் மனம் இச் சமாதானமுறைகளைக் கொண்டாடலாம். இப்படிக் கொண்டாடுவதால் முடியுங்கருமம் யாதொன்றுமில்லை. 'இது நன்றே' என்று சொல்லிச்செல்வர் அவர்—அவ்வளவே.

* * *

"காமம்கோபம்மயக்கம் ஆதியவிவகாரங்களுக்கு வயமாகும் மனிதனது புன்மைக்குணத்தைக் கிளரிவிடுவதால் அக்குணங்கள் வலியுறுவதல்லாமல் சோதரத்துவம் என்னுமது பகுத்தறிவில்லாப் புல்லியோர் தம்முள் எப்படிக் கைகூடும் என்பது தான் விளங்கவில்லை. சங்கமாய்ச் சூழ்ந்து மத்திபஸ்த சபைகள் நிறுவி உலகத்தில் போரிலா அமைதியை முளைக்கச் செய்வோம் என்ற கூக்குரல், மந்திரத்தால் மாங்கனி முளைக்க வைக்கும் வித்தையேயாகும்.

* * *

"மத்தியஸ்த சபைகளால் உலகசமாதானத்தையும் சகோதரபாவத்தையும் வளர்த்துவைக்க இயலுமென்றே வைத்துக்கொள்வோம். அகில உலக மத்திய சபையாரும் (International Arbitration Board) சமாதான கமிட்டியாரும் (Peace societies) தங்களது திட்டத்தை எல்லா நாட்டாரும் ஏற்குமாறு செய்ய என்ன அதிகாரம் பெற்றிருக்கின்றனர். அதிகாரம் ஒன்றும் இல்லை என்றால்பின் யார் உங்களது திட்டத்தை ஏற்பர்? ஐய, இவ்வுலகத்தில் அனியாயத்திலும் அனியாயமானது யாதெனில்-வாளால் வற்புறுத்தி நிலைநிறுத்த இயலா நியாயமே. ஆற்றலில்லாத அறத்தால் வருவது கேடேயாகும்.

* * *

"வாய்ப்பேச்சால், விதிவிலக்குக்களால், சங்கத்தால், மத்தியஸ்த சபைகளால், அமைதியையும் சகோதரத் தன்மையையும் எள்ளளவேனும் பெற்றுவிட முடியாதென்றேன். புறத்திருந்து இந்நிலையைப் புகுத்திவிட எங்ஙன மியலும். பொருளை யீட்டும் கடைக்காரவிவகாரங்களினால் எப்படி அமைதியும் சகோதரபாவமும் ஏற்படாவோ அப்படியே ராஜதந்திர நிபுணர்களின் சங்கமுயற்சியாலும் திட்டங்களாலும் அவை ஏற்படவே ஏற்படா. இன்னதற்குச் சான்று இன்றுவரை நிகழ்ந்துள்ள உலக சரிதையே.

* * *

"இபற்றிவைத்தால் இச்சில மாந்தரிடைச் செழித்தோங்க வழிதா னிலதோஎன்றக்கால், இருக்கின்றது.

'இவன் உன் நாட்டான், இவன் என் நாட்டான், இவன் என் ஜாதியான், இவன் உன் ஜாதியான்' என்ற வேற்றுமைநினைவு அறறே அகன்றுவிட வேண்டுமெனின் ஐய, அப்பெறற்கரிய நன்னிலையை உலகிடை நல்கவல்லது, கலையாதி நூல்களை நுனித்துவக்கும் நலமுடைய மனந்தான். காலத்தையும் எல்லையையும் பூகோளத்தளைகளையும் கடந்து விவகரிக்கும் பெருமையுடையது கலைநலங் கனிந்த கருத்துக்களே.

* * *

ஜெர்மனியில் பெருமையுறப் பிறந்து வாழ்ந்த கீதே என்னும் பெரும் புலவரை எடுத்துக்கொள்வோம். தேசபக்தி அதிகம் உடைய அவரளவு ஜெர்மன் நாட்டினிடத்திலும் அந்நாட்டு மக்களிடத்திலும் நேயமுடையார் பிறர்இருந்திலர். ஆனால் இவரதுதேசபக்தி பொலிந்தவிதந்தான் வேறு. ஐரோப்பாக் கண்டத்தையே தன்படைகளாலுழக்கிய அப்பிரான்ஸ-தேச வீரன் நெப்போலியன் தண்டெடுத்துத் தமது நாட்டினில் புகுந்து பாழ்செய்தகாலத்தில் இத்தேசபக்தர் ஊமையெனச் சும்மா விருந்துவிட்டார். பிரான்ஸின் மேல் ஒருபழி சுமத்தவில்லை. வஞ்சின மொழியொன்றும் அவர் பகர்ந்தாரல்லர். தனக்கு இணையில்லை என்றபடி ஜெர்மனியை நேசித்த அப்பெருமகன் கீதே, நெப்போலியன் படையெழுச்சியைப்பற்றி வாயையே திறவாது இருந்துவிட்டார்.

இவ்வண்ணம் மௌனஞ்சாதித்த புலவர் பெருமகனை நண்ணி யொரு சிற்றறிவன்—'ஏன் ஐயா, நம் தேயமே அழியலாகுமிக் காலத்தில், வாயையே திறவாது இருக்கின்றீர். இதுதான் நும் தேசபக்தியோ,' என்று கேட்க, கேட்டவாய் நாணத்தால் பொத்திப் போகப் பொன்னுரை சில சொல்லலானார் அவர்—

"பகைக்க வியலாவொருவன் பகையொடு புகையும் மொழிகளைப் பாடிப் புலம்ப வொண்ணுமோ! சொல்வாய். கலைகளாற் பெறும் கல்சரைத் தொழுவதே கருமமெனக்கொண்டுள ஒருவன், கலையாதி பெருமையால் மிகச்சிறந்த நாடான பிரான்ஸையும், பிரஞ்சு மக்களையும் எப்படி வெறுக்கமுடியும்".

* * *

"இந்நாளுலகத்தில் (Modern World) முதன் முதலாக இவ் வேதமொழியைக் கீதே தான் ஓதிவைத்தார். நிரந்தர அமைதியும் அன்பும் சோதரபாவமும் இனி ஒருகால் வருங்காலஉலகத்தில் படர்ந்து நிலைக்குமாயின் அன்னதற்குத் துவக்கம் கீதேயின் செம்மொழியே யாகும். கலைத்துறை தழைக்கலான கல்சர் தான், தேசம் என்றும் ஜாதி யென்றும், நீ யென்றும் நான் என்றும் விவகரிக்கும் இருளைக் கொன்று, மனத்திலே விளக்கேற்றி மாந்தரொடுமாந்தரை மெய்யாய அறிமுகஞ் செய்துவைக்கும்.

* * *

"நாடொடுநாடு மலைகின்றது. இப்படிமலையத்துவக்கு முன், நாம் சிறிது சிந்திப்பதில்லை. ஒரு நாட்டாருடன் நாம் போர் தொடரப்புகுங்கால், பொருவதால் விளைவது ஒரு நாட்டினுடைய சிறந்த அம்சமான கலையும் கல்சரும் அழியலாவதே யல்லாமல் வேறொன்றும் அன்று என்றநினைவு நேருமாயின் யுத்தந்தான் பின் நடக்க இயலுமோ, சொல்வீர். ஒரு நாட்டின் அம்சங்களில் மிகச்சிறந்தது கலைதான், பணமன்று. தோற்றவர் வென்றவர் இருவர்களோடு அவர் கல்சரையும் அழிப்பதல்லால் வேறு எப்பயனையும் யுத்தம் இதுவரை நல்கியதாகத் தெரியவில்லை.

* * *

"யுத்தம்செய்வது மிகக் கொடியதென்றும், கெட்டதென்றும் நாம் சொல்லக்கேட்கின்றோம். அங்ஙனமே கொள்ளவும் கொள்கின்றோம். அப்படி நாம் கொண்டும் பேசியும் வருகின்றவரை, போரின்பால் ஒரு பிரமையும் போர்புரியவேண்டும் என்னும் ஓர் உள்ளத் தூண்டுதலுந்தான் இருக்குமே யல்லாது, யுத்தமில்லா நிலையை நாம் காண்பது முயற்கொம்பேயாகும். என்றைக்கு நாம், காண்பதற் கழகையும் மனதிற்குச் சுவையும் தரும் ஒரு தன்மையுத்தத்திற்கில்லை எனக்கொள்கின்றோமோ அன்றே யுத்தஎண்ணம் மாந்தர் மனம் பெயர்ந்து அகன்றுவிடும். இவ்வழியில் அமைதிநிலை விரைவினிற் பெறவியலாதே என்று கேட்கலாம். ஐய, மெல்லத்தான் நடக்கும், அப்படி நடப்பதையும் ஜனங்கள் அறியமாட்டார். 'யுத்தம்செய்தல் என்பது மனத்திலிருந்து அகன்று வருகின்றது' என்பது நமக்கு எவ்வளவுக் கெவ்வளவு தெரியாது போகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு யுத்தம் குறைந்து அமைதியும் அன்பும் நிலைத்துவருகின்றன. 'யுத்தம் நின்று விட்டது, சமாதானமும் பரவி வருகின்றது' என்ற நினைவு யுத்தம் நின்றதற்கும் சமாதானம்பரவுவதற்கும் ஏற்ற அறிகுறியன்று. அந்த நினைவு ஜனங்களிடை இருக்கும்வரை யுத்தமும் குழப்பமும் பூசலும் இருந்தே தீரும். யுத்தம் என்ற பதமே மறைந்துவிடவேண்டும்.

* * * *

"யுத்தமேஇல்லாது போவதற்கு'யுத்தம்' என்ற ஞாபகமே இருக்கலாகாது என்றேன். கலையினாற்றெளிந்த கல்சரிலே ஆழ்ந்துயர்ந்தவன், 'பிரான்ஸ் தேசத்தாருடைய காவியங்களும் வசனநூல்களும் குறையிலாவகை நிறைந்திருப்பதால் நான் பிரஞ்சுமக்களோடு போர்செய்யமாட்டேன், என்று சொல்லமாட்டான். மற்று, பிரஞ்சுக்காரர்களுடைய காவியங்களும் வசன நூல்களும் குறையிலாவகை நிறைவெய்தியிருப்பதால் பிரஞ்சுமக்களுடன் போர்செய்ய வேண்டுமென்னும் எண்ணமே அவன் உள்ளத்தில் தேடித்தேடிப் பார்த்தாலும் மருந்திற்கும் அகப்படாது.

* * * *

"சங்கமாய்ச் சூழ்ந்துசூழ்ந்து ஜனநலந் தேடும் கூட்டத்தாலும், காசிலே கண் நாட்டியுள மான்சஸ்டர் வியாபார மாக்களாலும், ராஜதந்திரிகளின் நெடுங்குரலாலும், சட்ட திட்ட முயற்சியாலும், உலகம் ஒன்றுபடாது. திப்பியத் தூய்மை வாய்ந்த கலையுணர்வே, ஒன்றுபடவேண்டுமென்னும் ஞாபகமும் இல்லாவகை உலகத்தைச் சந்துபட இணைத்துவைக்கும் பெற்றியது. அப்பொழுது பொழியும் அமைதியோ, கலைநுணுக்க உணர்வினை டுதித்தவொரு முழுமதியின் தண்மையேயாய்த் தழைக்கலாகும்.

* * * *

"கட்சியையும் காரியத்தையும் அரசாங்கமுறை ஏற்பாடுகளையும், கலைநலங்களை நுனித்துணர் பயிற்சியால் பெற்றகல்சரையுடையமனம் ஏற்பதில்லை, கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. அம்மனத்திற்கு உண்மையென்பது தான் ஒன்றைப்பெறுவதற்குரிய சாதனமன்று. ஒன்று

பேறுதல் என்பது அம்மனத்திற்கு அயலான தொன்றாகும். உண்மையின்பொருட்டே உண்மையை ஏற்குமொரு நிலையைக் கல்சரால்கைவரப்பெற்ற மனம் பின் விரும்புவதற் கொன்றுளதோ. உண்மையே மனமானால் உண்மையென்ற தனியொன்று இருப்பதற்கு இடமேது.

* * * *

“இம் மனநிலையை இங்கிலாந்தில் இருப்பவர்களில் எவர் பெற்றுளர்? அந்நன்னிலையை நாம் ஒவ்வொருவரும் அடையவேண்டுவது அவசிய மன்றோ? ஆனால் என்செய்வது! பிரிட்டிஷார் மனமோ கடுஞ்சினத்தால் பொங்குகின்றது. இங்கிலாந்தின் மனமெல்லாம் கடையாய அரசியல்வாதிகளின் பொருள்போல் பொருளல்லாப் பூசலிலும், சமயவாதச் சிறுமையிலும் வீணாகக் கரைகின்றது. இப்படி மனதைப்பாழாக்கும் நாம் பாபிகளைக்கண்டு கடிகின்றசெயல் என்னபேதைமை. நமது அவமானத்தின் சின்னம் பாவியோ, ஐய சொல்வீர். பாபிகள் அல்லர். நமது அவமானத்தின் அடையாளமாய் இருப்பவர் புத்தியில்லா மூடர்களே. பாபத்தின் இருப்பிடம் அறியாமையே. மூடர்களாய் நாம் இருந்தும் பாபத்தைப் பழிப்பானேன்.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

[890-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டாம் பத்து—4-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

ஆடியாடி யகம் கரைந்து இசை
யாடிப்பாடிக் கண்ணீர் மல்கி எங்கும்
நாடிநாடி நரசிங்கா வென்று
வாடிவாடு மிவ்வாணு தலே.

அவதாரிகை:—சென்ற தசகத்தில் வைகுண்டத்தில் “வானுளார் குழாங்களுடன் உடன்கூடுவது என்றுகொல்” என்று ஆசைப்பட்ட ஆழ்வார் அங்ஙனம் அவர்களோடு கூடி எம்பெருமானை அப்போதே அநுபவிக்கப் பெறுமையாலே ஒரு க்ஷணம்மாத்திரம் தரித்து உயிரை ரக்ஷித்துக்கொள்ள முடியாதவராய் எம்பெருமானை நினைந்துகொண்டு அவன்திறத்தில் சொல்லும் வார்த்தைகளையும் செய்யும் சேஷ்டைகளையும் கேட்டும் கண்டும் தம்முடைய பந்துக்கள் எம்பெருமானுக்கு இவர்தம் ஸ்திதியை விண்ணப்பம் செய்து சொல்லுகிறபடியைத் தம் மனதால் அநுஸந்தித்து இப்பொருளை, எம்பெருமானை ஆசைப்பட்டு நோவுபடுகிற ஒரு பிராட்டியின் திருத்தாயார் தன் மகளின் வருத்தத்தை எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்து இவள் முடிவதற்குமுன் வந்து தலையளி செய்யவேண்டும் என்கிற வாக்கியங்களாலே தம்முடைய சொந்த மனதின் நாட்டத்தை இப்பத்தால் அருளிச்செய்கிறார். ஆகையால் இத்தசகம் ஆழ்வார் ஒரு பிராட்டி அவஸ்தையையடைந்து மோஹித்திருக்கையில் அந்தப் பிராட்டியின் அவஸ்தையைத் தாய் சொல்லுகிறதாக விவரிக்கிறது.

பொழிப்புரை: —இந்தக் காந்தியுள்ள நெற்றியையுடைய பெண் விரஹத்தாலே மனது உருகிப் பகவானின் குணங்களை அடிக்கடிப் பாடி நின்றவிடத்தில் நிற்காமல் இங்குமங்கும் சஞ்சரித்துக் கண்ணீர் விட்டு அவனை இங்குமங்கும் தேடிப் பிரஹலாதாழ்வானை ஹிரணியன் முனிந்தபோது நரசிம்மாவதாரம் எடுத்து ரக்ஷித்ததுபோல் தனக்காகவும் அங்ஙனம் நரசிம்மாவதாரம் எடுத்துத் தோன்றுவதாக எண்ணி நரசிங்கா என்று கூவித் தரிசிக்கமாட்டாமல் அலைகிறாள்.

2-ம் பாசுரம்.

வாணுதலிம் மடவரல் உம்மைக்
காணு மாசையுள் நைகின்றாள் விறல்
வாண னாயிரந்தோள் துணித்தீர் உம்மைக்
காண நீரிரக்க மிலீரே.

பொழிப்புரை:—இவ்வழகி உம்மைக் காணவேண்டுமென்ற ஆசையாலே வேவா நின்றாள். நீரோ இவள் பக்கல் கிருபை செய்கிறதில்லை. அநிருத்தாழ்வானுடைய காந்தர்வமனைவி “உஷை”க் காக நீர் வாணாசுரன் ஆயிரம் தோள்களையும் துணித்தீரல்லீரோ? அப்படிக்கிருக்க என் பேதைக்குத் தலையளி செய்யவொண்ணாதோ?

குறிப்பு I:—இப்படித் தயவு பாராட்டாமலிருப்பது வாணாசுரனைப்போல் பிரதிகூலருக்கன்றோ செய்வது. “உம்மை யாசைப்பட்டார் திறத்திலும் பரிதாபமில்லாமல் இருக்கலாமோ”—ஆறாயிரப்படி.

குறிப்பு II :—அநிருத்தன் ஸ்ரீகிருஷ்ணபகவான் பேரன், சதுர் வியூகத்தில் ஒருவர். சதுர் வியூகங்களை பூஜிக்க அமைந்த கோவில்களில் இவரும் விக்கிரஹரூபியாய்ப் பூஜை பெற்றுவருகிறார். குவாலியர் ராஜ்ஜியத்தில் கோட்டைக்கருகாமையில் ஒரு (greek) யவனன் ஏற்படுத்திய கோவிலில் இவருக்கும் பூஜை நடந்து வருகிறது.

3-ம் பாசுரம்.

இரக்க மனத்தோ டெரியணை
அரக்கு மெழுகு மொக்குமிவள்
இரக்கமெழீ ரதற்கென் செய்கேன்
அரக்கனி லங்கை செற்றீர்க்கே.

பதக்குறிப்பு:—எரியணை - நெருப்பை அணைந்திருக்கிற. இரக்கம் எழீர் - இரக்கத்தை எழுப்பி விடுகிறீர் இல்லை - அதாவது கிருபை செய்யவில்லை. அரக்கன் - ராக்கதன் அதாவது ராவணன். என் செய்கேன் - இரண்டில் ஒன்று; உமக்கு இரக்கம் உண்டாக்க எத்தனிக்கவோ, அல்லது இவளை விரஹம் விட்டு ஒழியச்செய்ய வேண்டுவதோ அறியேன்.

பொழிப்புரை:—இவள் மனம் நெருப்பை அடுத்த அரக்கும் மெழுகும் போல் உருகித் தவிக்கிறது. ஓ

இலங்கையை நசிப்பித்தவரே? இவள் உம்முடைய விரஹத்தால் பீடிக்கப்படுகையிலும் ஏன் உமக்குத் தயவு உண்டாகவில்லை? இது ஒரு கொடுமையே. உம்மைக் கிருபைசெய்யச் சொல்லுகிறதா? இந்தப் பெண்ணை உம்மிடத்தி லாசைப்படாதிருக்கச் செய்கிறதா, எனக்கு ஒன்றுந் தெரியவில்லையே?

குறிப்பு I:-இப்பிராட்டியின் தாய் தன் பெண் படும் துயரங்கண்டு நொந்து மருமகனை இடித்துக் கூறுவதாகக் கொள்ளவேண்டும்.

II சீதாப்பிராட்டியாரை ஒருசிறு விரகால் சிறைமீட்க வல்லனாயிருந்தும் கொடூர சுபாவத்தால் ராவணன் தேசத்தையே ஸ்ரீ இராமன் அழித்தாரென்று இவள் குற்றம் சாட்டுகிறாள். கோபத்தால் வரும் வாக்கு பௌரஷம். மருமகன் மரபில் மஹாவிஷ்ணுவுக்கும் மாமியார்மாட்டு மரியாதை இத்துணையே !!

4-ம் பாசுரம்.

இலங்கை செற்றவனே யென்னும் பின்னும்
வலங்கொள் புள்ளயுர்த்தா யென்னு முள்ள
மலங்க வெவ்வுயிர்க்குங் கண்ணீர் மிகக்
கலங்கிக் கைதொழும் நின்றிவளே.

பொழிப்புரை:—இலங்கை செற்றீரே என்று நான் சொல்ல, ஸ்ரீ ராமபிரானை விட்டுப்பிரிந்த விஸனத்தால் சீதாப்பிராட்டி இலங்கையில் அடைபட்டு நிற்கஅவள் பொருட்டு இலங்கையை அழித்து ராவணனைக் கொன்று சீதாப்பிராட்டிக் குதவியதை நினைத்துத் தனக்கு அதுபோல் உதவிபுரிந்து ஸந்நிதானம் தருவாரென்றும், அதற்காக எழுந்தருள உமக்குக் கருடவாஹந மிருக்கிறதென்றும் உம்முடைய வரவை எதிர் பார்க்கும் அப்போதே வரக்காணாமையால் உள்ளம் கலங்கப் பெருமூச்சுவிடும். கண்ணீர் மிகக் கலங்கி ஒன்றும் சொல்லமாட்டாளாய்க் கைகூப்பித் தொழுதுகொண்டு நிற்கும்.

5-ம் பாசுரம்.

இவளி ராப்பகல் வாய்வெரீ இதன
குவளையொண் கண்ணநீர் கொண்டாள் வண்டு
திவளும் தண்ணந்துழாய் கொடீரென
தவள வண்ணர் தகவுகளே.

பொழிப்புரை:—முன்பாசுரத்தில் கூறியபடி “இலங்கை செற்றவனே” என்றும் “வலங்கொள் புள்ளுயர்த்தாய்” என்றும் இராப்பகல் வாயால் கூவிக்கொண்டு தன் குவளைபோன்ற கண்கள் அழுது நீர் பெருகிக் கொண்டிருக்கும். இப்படி மற்றவர்க்குத் தயை செய்து நிற்கும் நீர் இவள்மாட்டு அருள்புரிந்து வண்டு மொய்க்கும் திருத்துழாய் கொடுக்கின்றீர் இல்லை. பரமகாருண்யனான உம்முடைய தபவு இருக்கும்படி இதுவோ வென்கிறாள்.

6-ம் பாசுரம்.

தகவுடையவனே யென்னும் பின்னும்
மிகவிரும்பும் பிரானென்னும் என
தகவுயிர்க்கமுதே யென்னும் உள்ளம்
உகவுருகி நின்றுள்ளுளே.

பொழிப்புரை :—இப்படித் தாய் சொல்லி முடித்த **“தவள வண்ணர் தகவுகளே” என்ற வாக்கியத்தைக்** கேட்டதும் இப்பெண் அவனுடைய கிருபையை நினைத்துத் “தவள வண்ணனே—அதாவது சுத்தஸத்துவம் பொருந்தியவனாதலால் கருணைச் சுபாவமுள்ளவனே?” என்று கூப்பிடும். இக்குணமுடையவன் நம்மைக் கைவிடானென்று யோசித்துப் பின்னையும் அவன்பக்கல் ஆசைப்படும். அப்பொழுதே அவன் வரக்காணாமையால் நெஞ்சுருகும்படி கரைந்து நின்று வாய்ச்சொல் சொல்லவும் பிறர்சொல் கேட்கவும் பொறுமையால் தன்னுள்ளேயே பிரானென்றும் அமிர்தமே என்றும் தனக்குள்ளே சொல்லாநிற்கும்.

7-ம் பாசுரம்.

உள்ளுலாவி யுலர்ந்துலர்ந்து என்
வள்ளலே கண்ணனே யென்னும் பின்னும்
வெள்ளநீர்க் கிடந்தா யென்னும் என
கள்விதான் பட்ட வஞ்சனையே.

பொழிப்புரை:—தன்னுடைய ஹிருதயத்திலே நிற்கிற ஆத்மாவானது தண்ணீர்த் தாகத்தால் பீடிக்கப் பட்டவர்போலே வறண்டு “இப்பெண் என்னுடைய பிரபுவே” என்னுடைய ‘கண்ணனே’ என்று சொல்லாநிற்கும். பூர்ண நீர் நிறைந்த “சமுத்திரத்தில்” கிடந்தவனே, அதாவது “கண்வளர்ந்தவனே” என்று சொல்லும். தன் சௌந்தரியத்தால் வஞ்சித்து உம்மைக் கூட வசப்படுத்தக்கூடிய இந்தப் பெண் உம்முடைய குணங்களின் வல்லமையி லகப்பட்டு மோசம்போனாள்!

குறிப்பு:—பாசுரத்தின் இறுதி “ஏ”காரத்திற்குப் பொருள் “ஐயோ இதென்ன ஆச்சரியம்!”

8-ம் பாசுரம்.

வஞ்சனே யென்னும் கைதொழும் தன
நெஞ்சம் வேவ நெடிதுயிர்க்கும் விறல்
கஞ்சனை வஞ்சனை செய்தீர் உம்மைத்
தஞ்சமென்று இவள்பட்டனவே.

பொழிப்புரை :—உன்னுடைய குணாதிசயங்களில் அகப்படுத்தினவனே! யென்னும்-பின்னும் வார்த்தை சொல்ல முடியாமையாலே தன் கைகளைக் கூப்பித் தொழாநிற்கும். அப்போதே உம்மைக் காணாமையாலே தன் நெஞ்சு வேவுபடுகிறபடியால் பெருமூச்சு விடும். உம்மைத் தன் ஆபத்துக்குத் துணையாக நம்புகிற இப் பேதையை, வஞ்சனைசெய்து நீ கெடுத்த கம்சன் பட்டபாடு படுவிப்பது தகுதியோ? என்கிறாள்.

9-ம் பாசுரம்.

பட்டபோது எழுபோ தறியாள் விரை
மட்டலர் தண்டுழா யென்னும் சுடர்
வட்டவாய்நுதி நேமியீர் நுமது
இட்டமென் கொலிவ் வேழைக்கே.

பொழிப்புரை:-“ஆச்ரிதரைக் காப்பற்றும்பொருட்டு எப்பொழுதும் திருவாழியை ஏந்திக்கொண்டிருக்கிறீர், உம்மோடே கலவியை அநுபவிக்கவேண்டுமென்ற ஆசையாலே மற்றொன்றும் நினைக்கச் சக்தியற்ற ஏழையான இவள்திறத்தில் என்னதான் செய்யப் புக உமது இஷ்டம் என்று கேட்கிறாள்” - ஆறாயிரப்படி.

10-ம் பாசுரம்.

ஏழை பேதை யிராப்பகல் தன்
கேழிலொண் கண்ணநீர் கொண்டாள்கிளர்
வாழ்வைவேவ இலங்கை செற்றீர் இவள்
மாழை நோக்கொன்றும் வாட்டேன் மினே.

பொழிப்புரை :—நீர் கிட்டவொண்ணாத மகிமை யுடைவரென்று அறியாத இப்பேதை உம்மிடத்திலாசைப்பட்டு இராப்பகல் தன் அழகிய கண்களின் நீர்வடித்து அழுகிறாள். நீர் கிட்டாமையாலே இவளுக்கு விசனம் அவளை வாட்டிவிடும்போல் அதிகரிக்கிறது. சீதாப்பிராட்டியாருக்காக இராவணனைக் கொன்று அவள் துக்கத்தை நீர் நீக்கியது போல இப்பிராட்டியின் துயரத்தையும் நீரே, இலங்கைக்கு எழுந்தருளியதுபோல், உடன்வந்து போக்கியருள வேண்டுமென்று திருத் தாயார் அபேக்ஷிக்கிறாள்.

குறிப்பு:—“ மாழை நோக்கு ஒன்றும் வாட்டேன் மினே ” என்றது, “இப்பிராட்டிக்கு எல்லா அழகும் குன்றிப்போய் விட்டது. துயரத்தால் நசித்துக் கெடாதது வெகு அழகான நோக்கு ஒன்றே உளது. அதுவும் சிதையுமுன் கிருபைசெய்யவேண்டும்” என்பதாம்.

உட்பொருள்:—“ஆழ்வாருக்கு எல்லா உணர்வும் பகவத் விரஹத்தால் அடங்கிப்போயின. தீவிரமான பக்தி ஒன்றே மிகுந்திருக்கிறது. அதுவும் நசிக்கும் முன் கடாக்ஷம் செய்யவேண்டு மென்றபடி”

11-ம் பாசுரம்.

வாட்டமில் புகழ் வாமனனை இசை
கூட்டிவண் சடகோபன் சொல் அமை
பாட்டோ யிரத்திப் பத்தால் அடி
சூட்டலாகு மந்தாமமே.

பதவுரை:—வாட்டமில்-வாட்டமில்லாத, புகழ்வாமனனை - புகழ்ச்சியான குணங்களையுள்ள வாமனனை, இசைகூட்டி-சுவரத்தோடு சேர்த்து, வண் சடகோபன்- உதார சுபாவமுடைய ஆழ்வார், சொல் - அருளிச் செய்த, அமை - இலக்கணங்களமைந்த, பாட்டோராயிரத்து - அதிசயமான பாக்களான ஆயிரத்திலே, இப்பத்து - இந்தப்பத்தை, அடி - பகவானின் திருவடிகளில், அந்தாமம் - அழகிய மாலைகளாக, சூட்டலாகுமே - அலங்கரிக்கலாகும்.

இப்பத்தினிறுதியில் “வாட்டமில் புகழ் வாமனன்” என்றபடியாயால் ஆழ்வார் விரஹத்தால் துயரப்படும் அவசரத்தில் அவரது மனக்கிலேசம் தீர பகவான் வந்து தோன்றினராகையால் நாரணன் புகழ் குன்றாது நிலைபெற்றதென்பது திருவுள்ளம். பக்தர்கள் அபேக்ஷையை நாரணன் தலைகட்டிக்கொடுப்பவ ரென்பது இப்பத்தின் கருத்து.

தமிழ்ப் பாடம் 147.

இலக்கணம்

[892-வது பக்கத் தொடர்ச்சி]

னகர மெய்யீறு.

III நிலைமொழி யிறுதியில் னகரமெய் + வருமொழி முதலில் வல்லின மெய்.

(a) வருமொழிமுதலில் ககர சகர பகர மெய்களும், நிலைமொழி யிறுதியில் னகர மெய்யும்.

i ஆறும்வேற்றுமைத் தொகை, மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகள், பண்புத்தொகை ஆகிய இத்தொடர்களில், வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வர நிலைமொழியீற்று னகரமெய், றகர மெய்யாகத்திரிந்து புணரும் என்று பொதுவாகக் கூறலாம்.

பொன் + பொலிவு = பொற்பொலிவு— ஆறும் வேற்றுமைத் தொகை.

பொன் + குடம் = போற்குடம்— 3-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை.

முன் + பிறப்பு = முற் பிறப்பு } பண்புத்
பின் + பகல் = பிற் பகல் } தொகை.

பொதுவிதி இத்வாயினும் தமிழிற் பயில்கின்ற னகரமெய்யீற்றுப் பெயர்ச் சொற்களின் பெரும்பகுதி இவ்விதிக்கு மாறாகவே புணரக்காண்கின்றோம். அவைகளிற் சில வருமாறு:—

(1) வான் வேன் மான் மீன், ஆகிய இச்சொற்களின் ஈற்று னகரமெய் ஒரு பொழுதும் றகர மெய்யாகத் திரியாது:—

வான் + சிறப்பு = வான் சிறப்பு
வான் + சுவை = வான் சுவை
மான் + கால் = மான் கால்
மீன் + கண் = மீன் கண்

குறிப்பு:—மீன்என்ற சொல்லின் ஈற்று னகர மெய் றகரமாகத்திரிந்து புணர்வது இக்காலத்திலில்லையேனும், பழைய வழக்கத்தை நோக்குங்கால், மீற்கண் எனப்புணரினும் பிழையாகாது.

(2) ஆன் கோன் கான் போன்ற சொற்களில் சாரியையாய் ஈற்றில் நிற்கும் னகரமெய் வருமொழி முதலில் வல்லினம்வர றகரமாகத் திரியாது.

ஆன் + கன்று = ஆன் கன்று.
கோன் + குணம் = கோன் குணம்.
கான் + கோழி = கான் கோழி.

(3) மகன் வேந்தன் அரசன் போன்ற உயர்திணைப் பெயர்களின் ஈற்று னகரமெய், வருமொழிமுதலில் வல்லினம் வர, றகரமாகத் திரியாது.

மகன் + பெருமை = மகன் பெருமை. (மகற் பெற்றவர் எனவருதலும் உண்டு)
வேந்தன் + கவிகை = வேந்தன் கவிகை
அரசன் + சிறப்பு = அரசன் சிறப்பு.
மகன் + பரதன் = மகன் பரதன்—மகனாகிய பரதன் என விரியும் இது பண்புத்தொகை.

(4) எகின் (அன்னம்), குயின் (மேகம்) அலவன் (நண்டு), கலுழன் (கருடன்) எயின் (வேட்டுவசாதி), அழன்(பிணம்)என்னும் இவ்வஃறிணைப் பெயர்களின் ஈற்றிலுள்ள னகரமெய்யும், வருமொழிமுதலில் வல்லினமெய்கள் வர, றகரமாகத் திரியாது.

எகின் + சிறை = எகின் சிறை (இது எகினச் சிறைஎன அகரச்சாரியைபெற்றுப் பெரும்பாலும் புணர்கின்றது)
குயின் + கருமை = குயின் கருமை.
அலவன் + கால் = அலவன் கால்
கலுழன் + சிறகு = கலுழன் சிறகு.
எயின் + குடி = எயின் குடி (எயினக் குடி என அகரச்சாரியை பெற்றும் புணரலாம்).
அழன் + பாணை = அழன் பாணை,— இது அழப்பாணை என ஈறுகெட்டும் புணரலாம்.

(5) மின் (மின்னல்); பின் (பெருமை, வழி, காரணம்) பன் (ஓர்வகைப் புல்); கன்(தராசுத்தட்டு) என்னுஞ் சொற்களின் ஈற்றிலுள்ள னகரமெய்,வருமொழி முதலில் வல்லின மெய்வர றகரமாகத் திரியாது.

மின் + காட்சி = மின்காட்சி
பின் + குலம் = பின்குலம்—பின்னை உடைய குலம் என விரியும் இது, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை (பின் = பெருமை).
பன் + கட்டு = பன்கட்டு
கன் + குழிவு = கன்குழிவு.

குறிப்பு:—இவை, மின்னுக்காட்சி, பின்னுக்குலம், பன்னுக்கட்டு, கன்னக்குழிவு, என உகரச் சாரியையும் அகரச்சாரியையும் பெறலாம்.

(6) நின், உன், என்னுஞ் சொற்களின் ஈற்றிலுள்ள னகரமெய், வருமொழி முதலில் வல்லினம் வர, றகர மெய்யாகத்திரியாது.

நின் + பிறப்பு = நின் பிறப்பு
உன் + குலம் = உன் குலம்.
நின் + சிரம் = நின் சிரம்.

குறிப்பு:—ஆனால், தன் என் என்னுஞ் சொற்களின் ஈற்றிலுள்ள னகரமெய் வருமொழி முதலில் வல்லின மெய்வர, றகரமாகத்திரிந்தேனும், திரியாமல் இயல்பாகவேனும் புணரலாம்:—

தன் + புகழ்ச்சி = தன் புகழ்ச்சி, தற்புகழ்ச்சி
நின் + பகை = நின்பகை, நிற்பகை.
தன் + காப்பு = தற்காப்பு.

ii. முன்னுரைத்த புறநடைகளுக்கு அடங்கியபடி ஆறும் வேற்றமைத்தொகை, மற்ற வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை, பண்புத்தொகை, ஆகிய இம்மூன்று தொடர்களிலும் தவிர மற்றைய தொடர்களிலெல்லாம், வருமொழி முதலில் வல்லின மெய்வர நிலைமொழி யீற்று னகரமெய் றகரமாகத்திரியாமல் இயல்பாய்ப் புணரும் என்று ஒருவாறு கொள்ளலாம்.

பொன் + பிரகாசித்தது = பொன்பிரகாசித்தது } எழுவாய்த்
நான் + செல்வேன் = நான் செல்வேன் } தொடர்

பயன் + கண்டேன் = பயன் கண்டேன் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

பொன் + கல் = பொன்கல் (பொன்னுங் கல்லும்— உம்மைத் தொகை)

காண்பான் + சென்றேன் = காண்பான் சென்றேன் —வினையெச்சத் தொடர்.

தின் + சோறு = தின்சோறு—வினைத்தொகை.

கூறுவான் + புதல்வன் = கூறுவான் புதல்வன்— வினைமுற்றுத் தொடர்.

குறிப்பு:—னகர மெய்யை ஈற்றிலுடைய வேற்றுமை உருபு சாரியை விகுதி அசைநிலை, அனைய இடைச் சொற்களோடு வருமொழிமுதல் வல்லினமெய் புணர்வதற்குரிய விதிகள் சில நினைவிற் கொள்ளவேண்டும்:—

(1) முன் வயின், என்னும் ஏழாம் வேற்றுமை உருபிலும், இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபிலும், ஆன் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபிலும், ஈற்றிலுள்ள னகரமெய், வருமொழி முதலில் வல்லினமெய் வர, எல்லாத் தொடர்களிலும், றகரமாகத்திரியும்.

பல்லார்முன் + செல்லல் = பல்லார்முற்செல்லல்
நின்வயின் + பெற்றேன் = நின்வயிற்பெற்றேன்.

குறிப்பு:—பின் என்னும் உருபின் ஈற்று னகரம் திரிவதில்லை.

காதலின்பின் + சென்றமனம் = காதலின்பின் சென்றமனம்.

முன், பின், என்னும் இடப்பொருளுடைய உருபுகளுக்கே இவ்விதி பொருந்தும். இவை உருபுகளாய் நில்லாமல் இடம் அல்லது காலத்தையே குறிக்கும் சொற்களாய் வழங்கும்போது, முன்கை பின்புறம், எனத்திரியாமலும் முற்காலம், பிற்பயக்கும் என்று திரிந்தும் வரக்காண்கின்றோம்.

இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபின் ஈற்றிலுள்ள னகரமெய், சிலபோது திரிந்தும் சிலபோது திரியாமலும் புணரும். எல்லைப்பொருளில் மாத்திரம் திரியாதென்றும், நீங்கல் ஒப்பு ஏதுப்பொருள்களில் திரியுமென்றுங் கொள்ளலாம்.

சென்னையின் + கிழக்கு = சென்னையின் கிழக்கு —எல்லைப் பொருளில் திரியவில்லை.
அரசரின் + பெரியவர் அந்தணர் = அரசரிற் பெரியவர்—நீங்கல் பொருள்.
காக்கையின் + கரியது களாம்பழம் = காக்கையிற் கரியது—ஒப்புப் பொருள்
கல்வியின் + பெரியவர் கம்பர் = கல்வியிற் பெரியவர் கம்பர்—ஏதுப்பொருள்.

எனினும், ஐந்தாம் வேற்றுமை இல்லுருபின் ஈற்று லகரந்தான் றகரமாகத்திரிந்து, அரசரிற் பெரியவர், காக்கையிற் கரியது, கல்வியிற் பெரியவர், என ஆயிற்றோ என்னும் ஐயத்திற்கும் இவையனைய உதாரணங்களில் இடமுளது.

ஆன் என்னும் மூன்றும் வேற்றுமை ஈற்று னகர மெய் றகரமாகத்திரிந்து புணரும்.

கண்ணன் + கண்டேன் = கண்ணாற் கண்டேன்.

இதனினும், ஆல் உருபின் ஈற்று லகரந்தான் றகரமாய்த்திரிந்து கண்ணாற் கண்டேன், எனப்புணர்ந்ததோ என்றையுறுதற் கிடமுளது.

(2) அன் இன் தன் தான் ன், என்னும் சாரியைகளிலுள்ள ஈற்று னகர மெய் றகரமாகத்திரியாது.

ஒன்றன் + கூட்டம் = ஒன்றன் கூட்டம்
பொன்னின் + சோதி = பொன்னின் சோதி
வண்டின் + கால் = வண்டின்கால்
மனைவிதன் + கற்பு = மனைவிதன் கற்பு
பிள்ளைதான் + பெற்றாள் = பிள்ளைதான்பெற்றாள்.
ஆன் + கன்று = ஆன் கன்று.

(3) மன், இசின் என்னும் அசைநிலைகளி னீற்றி லுள்ள னகரமெய் றகரமாகத்திரியும்.

இதுமன் + கொண்கன்தேர் = இதுமற் கொண்கன் தேர்.

பூண்டிசின் + கடையும் = பூண்டிசிற் கடையும்

(4) வினையெச்ச விகுதிகளில் வான் பான் என்னும் இரண்டின் ஈற்றிலுள்ள னகரமெய் றகரமெய் யாகத்திரியாது. இன் என்னும் விகுதியின் ஈற்றிலுள்ள னகரமெய் மாத்திரம்திரியும்

கொல்வான் + புகுந்தான் = கொல்வான் புகுந்தான்

காண்பான் + சென்றான் = காண்பான் சென்றான்.

கொடுப்பின் + கொள்வேன் = கொடுப்பிற் கொள்வேன்.

(5) வினையாலணையும் பெயர்களின் ஈற்றிலுள்ள னகரமெய் றகரமாகத்திரியாது.

கொள்பவன் + கொடுக்கமாட்டான் = கொள்பவன் கொடுக்கமாட்டான்.

கொன்றான் + பழி = கொன்றான் பழி (கொன்றவனுடைய பழி)

குறிப்பு:—எவ்வகைப் பெயரின் ஈற்றிலுள்ள னகரமெய்யும், நான்காம் வேற்றுமை கு உருபு ஏற்கும்போது றகரமெய்யாய்த் திரியும்.

மன்னன் + கு = மன்னற்கு
மகன் + கு = மகற்கு
அவன் + கு = அவற்கு
கண்டேன் + கு = கண்டேற்கு
நின்றான் + கு = நின்றாற்கு.

மன்னற்கு, என வல்லின றகரம் வந்த சொல் மன்னன் + கு எனப் பிரியுமாகையால் ஒருமை யென்றும், மன்னர்க்கு என இடையின ரகரம் வந்த சொல் மன்னர் + கு எனப்பிரியுமாகையால் பன்மை யென்றும் தேர்ந்துகொள்ளல் வேண்டும்.

தனிப்பாடல்கள்.

நவாலி. கா. சோமசுந்தரம் பிள்ளை.

(கலைமகள்)

வாரி எடுத்து மடிமீ திருத்தி மலர்க்கரத்தாற்
கோதி பிறவிக் கொடுமை கெடத்தட விக்கொடுத்து
வாடிய வாட்டங் கெடமுத்த மிட்டு மனமகிழ்ந்து
தேடு மருள முதந்தரு வாள்தமிழ்த் தெய்வதமே.

முத்தன்ன மூரலும் துப்பா ரிதழும் முகமதியும்
நத்தன்ன கண்டமும் வேயன்ன தோளும் நளினமலர்
ஒத்தன்ன மென்னடைப் பாதமு மாக வுள்ளுறைவாள்
தெத்தென்ன வண்டிரை தாமரை மேய தமிழ்த்தெய்வமே.

ஓடிப் பிடித்திடுக் கெத்தூக்கிக் கொண்டுவர் தொக்கலையிற்
[illegible]ருந்து மடிமீ திறக்கித் துடைத்தணைத்துக்
[illegible]த்து மறியாமை போக்கிடக் கொஞ்சியின்பம்
[illegible] மமுதருள் வாணுயிர் நாவினில் நின்றவளே.

மணிக்கடகக் கையினிலோர் சிறுதடியுங் கொண்டு
வந்து விடென்றே யுறுக்கி மணிச்சிலம்பு புலம்ப
அணிக்கோலம் புழுதிபட விளையாட்டோ வுமக்கு
அடிப்பேன் பாரென்று வரவஞ்சி நிலமுதைந்து
பிணிப்பான வறியாமை யாற்சிணங்கி யழுங்கால்
பெரிதுமகிழ்ந் தோடிவந்து பிடித்தெடுத்துக் கொஞ்சி
இனிப்பான வருளமுத மிருதனமுஞ் சுரக்க
ஈந்திட்டாள் எனையீன்ற வீணையில் தமிழ்த்தாயே.

காலையிலே யுடல்கழுவிக் குஞ்சிமுடி திருத்திக்
காப்பிட்டுப் பொட்டிட்டுக் கலையுடுத்திப் புனைந்து
மூலையிலே யிருவென்ன முற்றத்தி லோடி
முழுப்புழுதி விளையாடும் முறையென்ன வென்றே
சேலையிலே மண்துடைத்து வலிந்திழுத்து மடிமேற்
சேர்த்தினிப் போதுமென்று சிணுங்கிடவும் விடாமல்
கோலவளி வருளமுதக் கொங்கைசுரந் தளித்த
கோமளத்தைச் சாமளவுங் கும்பிடுவேன் நானே.

தேமொழிப் பாவையைச் செந்தமிழ்த் தேவியைப்
பூமலர்ச் சேவடிப் புண்ணிய முதல்வியை
நாவமர் செல்வியை நந்தா விளக்கினைத்
தூமலர் தூவித் துதிப்போர்
பாவலர் துதிக்கப் பரந்து வாழ்குவரே.

ஏவுண்ட கண்ணுள் மதிமுகத் தாள்எளி யேனுரைக்கும்
பாவுண்டென் றீய வினைபசி பாறிய பைந்தொடியாள்
நாவுண்டு நல்லருள் நெஞ்சினி லுண்டு நளினபதப்
பூவுண்டு சென்னியிற் சூடிமெய் ஞானப் புகழ்பெறவே.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
[illegible] கன்ஸர்ன், பந்தர் தெரு, மதறாஸ்.
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0)
பிரான்சு: டிப்போ, பம்பாய் கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
மதுரை. காஞ்சீபுரம்.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்:—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம்:— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை:—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி:—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம்:—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம்:—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம்:—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50.
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன்:—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு:—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம்:—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

இனம்! இனம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

நீதிநெறி விளக்கம்

நீதிநெறி விளக்க மூலமும், பதவுரை, தோகுத்துரை, விருத்தியுரை, ஆங்கில மொழி பெயர்ப்பு.

இந்நூல் திருக்குறளின் சாரமாயிருப்பது கருதி, ஒவ்வொரு செய்யுளுக்கும் அதன் கருத்தமைந்த திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையுடன். ஒவ்வொரு செய்யுளுக்கும் புதிதாக எழுதப்பெற்ற விஷயத் தலைப்புகள் வினையுருபுகள் வெண்பா என்கிற இருவிஷயங்கள். நூலாசிரியர் சரித்திரம் நூலின் பெயரிலக்கணம்(புதிய பதிப்பு விலை நுபா 1-8-0. கலா நிலயம் சந்தாதாரர்களுக்கு நுபா 1-4-0. (தபால் கூலி வேறு.)

பேதர் வெயிட் காகிதத்தில் அச்சிட்டது நுபா 2-8-0

எஸ். பி சுந்தரம் கம்பெனி,
3 பீட். பார்க் டவுன், சென்னை.

கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப்பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா 4. தபால் செலவு வேறு.

EDUCATIONAL PUBLISHING CO.
Nungambakam, Madras.

Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-9, Old Court House St., Calcutta.

Insured for how much?
Is it sufficient?
Will it hurt you to make little sacrifices to pay your Life Insurance premium?
Can we satisfy you?

For Literature
Apply to:—
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.
NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

கலாநிலயத்தின் முதலிரண் டாண்டு பைண்ட் புத்தகங்கள் மிகச் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவில் வரைக.

கலா நிலயம் ஆபீஸ்,
வேளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல்நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

வர்த்தமானம்

இந்திய அரசியல் திருத்தம்

இந்தியா கவர்ன்மேண்டு அறிக்கை.

இந்திய ராஜப்பிரதிநிதி லார்ட் இர்வின், கமாண்டரின் சீப் ஸர். வில்யம் பர்ட்வுட், இந்திய அரசாங்க நிர்வாக சபை அங்கத்தினரான ஸர். ஜியார்ஜ் ரெயினி, ஸர். ஜேம்ஸ் கிரார், ஸர். ஜியார்ஜ் ஜஸ்டர், ஸர். பி. எல். மித்தர், ஸர். ஜோஸம்போர், எம். பஸ்லி ஹுஸேன் முதலியவர்கள் கையெழுத்திட்டு வட்டமேஜை மஹாநாட்டின் யோசனைக்கு அனுப்பியுள்ள சிபார்சு வருமாறு:—

"மாகாண அரசாங்கங்களில் ஏற்படவேண்டிய திருத்தங்களைப்பற்றிச் சைமன் கமிட்டியார் செய்துள்ள முடிவுகளை நாங்கள் அநேகமாய் ஏற்கின்றோம். மாகாண சுய ஆட்சி வேண்டுமென்று இந்தியர் விரும்புவதால், அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி தாராள நோக்கத்துடன் திருத்த விஷயம் கவனிக்கப்படவேண்டும். மத்திய அரசாங்க விஷயமாகச் சைமன் கமிஷன் சிபார்சுகளைச் சிறிது விரியச்செய்துள்ளோம். இந்தியா கவர்ன்மெண்டு இப்பொழுது பார்லிமெண்டிற்குக் கீழ்ப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் சிறிது மாறுதல்வேண்டும். பிரிட்டிஷ் பார்லிமெண்டும் இந்திய மத்திய அரசாங்கமும் எஜமானன் வேலைக்காரன் என்னும் பாவத்திலிராமல் ஒத்தமனதுடைய கூட்டாளிகள் போலிருந்து காரியங்களை நிகழ்த்தவேண்டும். இதுதான் மத்திய அரசாங்க விஷயமாய் எங்கள் யோசனை.

"இப்பொழுது இந்தியாவில் அரசியல் உணர்ச்சி ஜனங்களிடம் அதிகமாகி வருகிறது. சட்டமறுப்பு இயக்கத்தில் பலர் சேராதிருந்தாலும், அவ்வியக்கத்தில் அநேகமாய் எல்லோரும் அபிமானமுள்ளவர்களாகவே இருக்கின்றனர். இந்த இயக்கத்திலும், தேசிய அரசியல் வளர்ச்சியிலும் அபிமானமிருந்தபோதிலும், சில சிறிய தொகையையுடைய வகுப்பினர் சுயஆட்சி வந்துவிட்டால் தங்கள் வகுப்பினர் நன்மை பாதிக்கப்படுமோ என்று கவலையுறுகின்றனர். எனவே பொறுப்பாட்சி விஷயமாய் இவ்வகுப்புத் தொல்லைகள் கொஞ்சகாலம்வரை இருந்தே தீரும். என்றாலும் பொறுப்பாட்சி காலதாமத மில்லாது பெறவேண்டு மென்பதே இந்தியாவின் பொதுவான நோக்கமாக விருப்பதால் ராஜதந்திரிகள் நிலைமைக்கேற்றவாறு திருத்தங்கள் செய்ய வேண்டும்.

"மாகாண கவர்ன்மெண்டார் அனைவரும் இரட்டை ஆட்சியை விரும்பவில்லை. எனவே அம்முறை அகலவேண்டும். மாகாணச் சட்டசபையின் ஆயுளை 3 வருடத்திலிருந்து 5 வருடமாகச் செய்துவிடலாம். ஒவ்வொரு மாகாணத்தின் நிலைமைக்குத்தக்கபடி சட்டசபை அங்கத்தினர் தொகை அதிகமாக வேண்டும்.

"ஓட்டுச் சுதந்திர விஷயமாய் ஒவ்வொரு மாகாண அரசாங்கத்தாரும் ஒவ்வொரு விதமாய் அபிப்பிராயப் படுகின்றனர். பம்பாய் கவர்ன்மெண்டார் 100-க்கு 33⅓-வீதம் இப்பொழுது இருக்கும் ஓட்டர் தொகை அதிகமாகலாம் என்று கூறுகின்றனர். மற்ற மாகாண கவர்ன்மெண்டார் ஓட்டுச் சுதந்தரம் விரிவடைவதை விரும்பவில்லை. சைமன் கமிஷன் கூறியுள்ளபடி மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 10பேர் ஓட்டுரிமை பெறும்படி ஏற்பாடு செய்தலை இந்திய அரசாங்கத்தார் ஏற்கின்றனர்.

"சிறுபான்மை வகுப்பினர் உரிமைபாதுகாக்கப்படவேண்டி அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். ஐரோப்பியர், தாழ்ந்த வகுப்பார், சீக்கியர் இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கும் விஷயம் கவனிக்கப்படவேண்டும். ஹிந்து முஸ்லிம் பிரச்சினை விஷயமும் சிக்கலாயிருக்கின்றது. பஞ்சாப், வங்காள மாகாணங்கள் தவிர மற்ற மாகாண அரசாங்கத்தார் இவ்விஷயமாய்க் கூறியுள்ள சிபார்சுகள் ஏறக்கப்படலாம். பொதுவாய் மகமதியர் பிரதிநிதித்துவ விஷயமாய் மஹாநாட்டார் தீர ஆலோசித்து இருவகுப்பாரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு முடிவைச் செய்ய வேண்டும்.

"மத்திய கவர்ன்மெண்டில் இரட்டைஆட்சி ஏற்படுத்த வேண்டுமென்று சைமன் கமிஷன் அறிக்கை முடிவு செய்துள்ளது. இந்த இரட்டை ஆட்சியால் மத்திய கவர்ன்மெண்டு பாதிக்கப்படாதபடி, எந்த எந்த விஷயம் மாற்றப்பட்ட இலாக்காவில் விடப்படலாம் என்பதையும் நிர்ணயம் செய்துவிடவேண்டும்.

"இந்தியா சட்டசபையில் இப்பொழுது 150 பிரதிநிதிகள் இருக்கின்றனர். இனி 200-ஆகச் செய்யலாம். 200-இல் 150 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாக விருக்கலாம், மற்ற 50-ல் 7-பேர் நிலச்சுவான்தார்களின் பிரதிநிதிகளாகவும், இந்திய வர்த்தக சங்கத்திற்கு 5 பேராகவும் இருக்கவேண்டும். பாக்கி 38 நியமனம் செய்யப்படவேண்டும். இந்த நியமனத்தில் தாழ்ந்த வகுப்பினருக்கும் தொழிலாளர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும்.

"இராணுவவிஷயம் இந்தியா கவர்ன்மெண்டின்மேற்பார்வையில் இருக்கவேண்டும். இராணுவத்தில் இந்தியர் அதிகாரம் பெறும் விஷயம் கவனிக்கப்படுகிறது. இந்தியர் ராணுவத்தில் அதிகாரம் பெறும்படியான காரியம் இனியும் விரைவாகச் செய்யப்படும்.

இந்திய வரவுசெலவுப் பொறுப்பு இந்தியா கவர்ன்மெண்டினிடமே யிருக்கவேண்டும். இந்தியா மந்திரி பணவிஷயமாய்க் கட்டுப்பாடு செய்யும் அதிகாரம் பெறக்கூடாது. இப்படிப் பணவிஷயம் இந்தியா கவர்ன்மெண்டினிடம் வந்தபிறகும் அடியிற்கண்ட பாதுகாப்புக்களைப் பார்லிமெண்டு வகிக்க வேண்டியிருக்கும்:—

1. கடன்களுக்காகச் செலுத்த வேண்டிய வட்டி, ரெயில்வே, இந்தியா மந்திரியால் நியமிக்கப்படும் ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுப்பது, பென்ஷன் கொடுப்பது, அவர்களது குடும்பங்களுக்குப் பென்ஷன் கொடுப்பது ராணுவ உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் பென்ஷன் முதலியன கொடுப்பது பாதுகாப்புச் செலவு இவற்றிற்காக ஒரு ஐக்கிய நிதியை ஏற்படுத்துதல்.

2. செல்வ நிலைமையை நிரந்தரமாகச் செய்வதற்காக இராஜப்பிரதிநிதிக்கு மேற்பார்க்கவும் கட்டுப்பாடுகள் செய்யவும் சில விசேஷ அதிகாரங்கள் இருக்கவேண்டும்.

3. செல்வநிலைமை குலைந்துபோகும்போலிருந்தாலும் 1-வது நிபந்தனையின்படி செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறினும் பணப்பொறுப்பு அதிகாரத்தைத் திரும்ப எடுத்துக்கொள்ள இந்தியா மந்திரிக்கு அதிகாரமிருக்கவேண்டும். 2, 3-வது நிபந்தனைகளின்படி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் பிரதிநிதிகளுக்கு எல்லா நேரத்திலும் போதிய தகவல்களைத் தெரிவிக்கவேண்டும்.

லண்டனில் கடன்வாங்க ஹை கமிஷனர் செய்துவரும் வேலையை இந்தியாவுக்கு மாற்றிவிட வேண்டுமென்று சைமன் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. ரிசர்வ் பாங்கு ஏற்படுத்தும்வரை இந்தச் சிபார்சை அமுலுக்குக் கொண்டு வருவதை ஒத்திவைக்கவேண்டும்.

இந்திய சமஸ்தானவிஷயமாய் இப்பொழுது இருக்கும் மேற்பார்வையில் மாறுதல் ஒன்றும் தேவையில்லை என்றே அரசாங்கத்தார் கருதுகின்றனர்.

ஐரோப்பியர் உரிமை பாதுகாக்கப்படவேண்டுவது அவசியமாகும். ஐரோப்பியர் இந்தியர் தயவுபெற்று வாழவும், அல்லது அன்னியர்போல் இருக்கவும் விரும்பவில்லை. எனவே ஐரோப்பியரும் இந்தியரும் சிநேகிதப் பான்மையில் இருப்பதற்கான வகையில் அரசியல்முறை நிறுவப்படவேண்டும். ஏகாதிபத்திய பிரஜைகள் எல்லோரும் ஏகாதிபத்திய நாடுகளில் தங்கள் நாடுபோல் வாழவும், வியாபாரம் செய்யவும் வசதி அளிக்கவேண்டும். அப்பொழுது ஏகாதிபத்திய பிரஜைகளுக்குள் சினேகபாவம் வளரும்.

முடிவாக நாங்கள் கூறுவது இதுதான். இந்திய அரசியல் முன்னேற்றத்தை நாங்கள் ஏற்கின்றோம். இந்திய நிர்வாக விஷயத்தில் இந்தியரும் பிரிட்டிஷாரும் கூட்டாளிகள்போல் இருக்கவேண்டும். இந்திய வரிப்பணத்தைச் செலவுசெய்யும் விஷயமான அதிகாரம் கவர்னர் ஜெனரலுக்கு இருக்கவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்திரியின் வேலையாளாய் இருக்கக்கூடாது. சிறிய தொகையையுள்ள வகுப்பினர் பாதுகாப்போடு, பொதுவாய் இந்தியா பொறுப்பாட்சி பெறும்வகையில் செய்யப்படும் எந்த முடிவும் எங்களால் ஏற்கப்படும்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்க ளுடன்)—மூன்று பாகம் ... ரூ. 18 அ. 8

தமிழ்மொழி அகராதி
The Coronation Tamil Dictionary 10 0

தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.
வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்

எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. வி. பி. செலவு வேறு. விலை ரூபா 6 0 0.

:: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலாநிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நன்கறிந்த ஜீவன் - - - - - - ச்யவன் ப்ராஷ்

நிகரற்ற ஆயுர்வேத டானிக். இருமல், சளி,

க்ஷயம், இழுப்பு முதலிய வியாதிகளுக்கு நல்ல மருந்து. இரத்தத்தை விருத்திசெய்து ஞாபகசக்தியைக் கூர்மைப் படுத்தும். நீண்ட ஆயுளும் தேக ஆரோக்கியமும் நல்ல சக்தியும் தரவல்லது.

விலை:—1 பவுன் ரூ. 2-8-0. ½ பவுன் ரூ. 1-5-0.
பாகிங் தபால் செலவுகள் வேறு.

குஜராட் ஆயுர்வேத பார்மஸி, அகமதாபாத்; என்னுமிடத்தில் செய்யப்பட்டது.

ஸோல் ஏஜெண்ட்ஸ்:—

சீதாராம் மெடிகல் ஸ்டோர்ஸ்,
87. நயனியப்ப நாயகன் தெரு,
பார்க் டவுன், சென்னை.

குறிப்பு:—மெடிகல் அட்வைஸ் இனமாகக் கொடுக்கப்படும். பதிலிற்கு ஒரு அணா தபால் தலை அனுப்பவும். காட்லாக் இனம்.

ஒட்டக்கூத்தர் பாடிய

தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம் : 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்		ரூ.	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. **1-0-0.** (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—“ கலா நிலயம் ”,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.